
# திருக்கோயில்





பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுடன் இணைந்த ஒட்டன்சத்திரம் அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயில் எதிர்ப்புறமாக ராம்கோ சிமிண்ட்ஸ் நிறுவனத்தலைவர் திருமிகு பி.ஆர். இராமசுப்பிரமணியராஜா அவர்களால் 25 லட்ச ரூபாய் செலவில் உபயமாகக் கட்டித் தரப்பட்டுள்ள பழநி பாத யாத்திரை பக்தர்கள் தங்கும் மண்டபம் திறப்புவிழா 30.12.2001 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித் துறை அமைச்சர் திருமிகு பி.சி. ராமசாமி அவர்கள் இம்மண்டபத்தைத் திறந்து வைத்துச் சிறப்பித்தார்கள். பழநித் திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலர் திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல். அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.



# திருக்கோயில்



திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| மாலை 44 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | விசு - மாசி பிப்ரவரி 2002 | மணி 2 |
|---|---|---|---|

சிறப்பாசிரியர்

**திருமிகு த.ரா. சீனிவாசன் இ.ஆ.ப.**
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

**திரு ப. தனபால்,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திரு கே.கே. இராஜா,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.

முகப்பு

**சென்னை அருள்மிகு காளிகாம்பாள்**

## பொருளடக்கம்

பழநிப் பாமலர் - முனைவர் த. அமிர்தலிங்கம்

திருநீலகண்டர் வாழ்க்கை சொல்லும் நீதி
- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

சென்னை காளிகாம்பாள் திருக்கோயில் தலவரலாறு
இராஜேஸ்வரி விசுவநாதன்

சிந்தனைத் துளிகள் - டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி

தமிழிசை மும்மூர்த்திகள் - டி.எஸ். பாலு, எம்.ஏ., பிஎட்.

''நித்தம் இருபிடி சோறு கொண்டு இட்டு உண்டு இரு''
- திருப்புகழ்த் தேனீ

தட்சிணாமூர்த்தி திருவருட்பா – விரிவுரை
- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

ஓம் சக்தி – கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

ஸ்ரீதுளசிதாசர் – திருமதி மீனாட்சி கோகுலவாசன்

அன்னை அபிராமியின் கருணை - சேது. சிவா

பல்லியின் சாப விமோசனம் - இந்திரா ஆரா அமுதன்

உறங்காதெழுமின் – அரங்கமணி அம்மையார்

திருவள்ளுவர் வீடுபற்றி ஏன் சொல்லவில்லை?
- என். சிவராமன், பிகாம்., பி.எல்.

உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :



உயர்திரு ஆணையாளர் அவர்கள்
***திருக்கோயில்***
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*
தொலைபேசி : *8279407*



# பழநிப் பாமலர்

- டாக்டர் த. அமிர்தலிங்கம்



### விநாயகர் வணக்கம்

பழமுணக் கொண்டு தம்பி
பாலனை ஆண்டி யாக்கிப்
பழமுநீ ஆனாய் என்றே
பார்புகழ் குன்றம் சேர்த்தாய்
பழவினை மாற்றப் பக்தர்
போற்றிடும் விக்கி னேசா!
பழநிமா மலைமேல் பாடும்
பாமலர் காத்தல் கேட்டேன் 1

### நூல்

அமைச்சராய் அவனி ஆளும்
அன்பறி வடக்கம் யாவும்
அமையவே பெறினும் நன்றாய்
அருட்பணிக் கிடையூ றென்றே
உமையவள் மைந்தா வேண்டேன்
ஓங்கிடும் பழநிக் குன்றம்
உமைநனிப் புரக்கும் கோயிற்
தொண்டனாய் செய்யக் கேட்டேன் 2

திருத்தலம் காணும் வேட்கை
தூண்டவே வருவார் அன்பர்
அருமையாய்ப் பேணி வண்டி
ஆர்வமாய் ஓட்டி உன்றன்
பெருமையாம் புகழ்க்கோர் ஊறு
புரிந்திடா வண்ணம் சேர்க்கும்
திருப்பணிக்(கு) ஆவல் கொண்டே
திருமகள் மருகா கேட்டேன் 3

பாடியே தோளில் தூக்கிக்
காவடி ஆட்டம் ஆடித்
தேடியே வந்துன் பாதம்
தரிசனம் செய்வார் கோரும்
சூடமும் பழமும் தேங்காய்
சூதினில் விற்றல் இன்றிக்
கூடுநல் விலையே கூறிக்
கொடுத்திடும் பணியும் கேட்டேன் 4

அத்தனும் அன்னை மற்றும்
அன்புற வாகும் வேலோய்!
சித்தரும் தேவர் நாளும்
சூழ்தரும் பழநிக் குன்றில்
பத்தியை ஊட்டும் நல்ல
புத்தியைக் கூட்டும் உன்றன்
புத்தகம் பலவும் விற்றென்
பொழுதெலாம் போற்றல் கேட்டேன் 5

உயிரினைக் காக்கும் உன்றன்
உயர்மலை வேண்டி வந்து
மயிரினை மழித்து உன்போல்
மொட்டையாய் கோலம் கொள்ளும்
செயிரறு அடியார் தம்மைச்
சேர்ந்துவோர் வம்பும் இன்றி
மயிர்மழி வினையும் செய்ய
மன்னவா கேட்டேன் ஆணை! 6

அன்பெனும் வெள்ளம் ஆடி
ஐயநின் வாசல் வந்து
தன்னுணர் வொன்று மின்றித்
தலையவாய் கையுந் தூக்கி
முன்பினும் அறியா ராகி
மயங்குவார் வரிசை ஆக்கி
இன்மொழி காவல் செய்ய
ஈன்றவா கேட்டேன் கேட்டேன் 7

உண்டலால் நீரும் உண்ணாக்
கொள்கையர் எழிலார் கோலம்
உண்டபின் பசியை ஓர்ந்து
உண்ணிடம் விழைவார் அங்குக்

கண்டிடும் குப்பைக் கூளம்
கூட்டியே சுத்தம் செய்யும்
தொண்டுமே தூயா! வேலா!
தொழுதுநான் கேட்டேன் ஐயா! 8

உடைமையோர் கோடி வேண்டும்
ஊரள வாசை இல்லேன்
கடனெனக் கையை நீட்டும்
கடைநிலை வாழ்வும் வேண்டேன்
தடைசிறி தின்றி நாளும்
தன்னிக ரில்லாக் குன்றில்,
அடைந்தவர்க்(கு) அன்னம் ஊட்டும்
அறப்பணி செய்யக் கேட்டேன் 9

நாற்புறம் கதவை மூடி
நடுவொரு தூணில் கட்டிச்
சீறிடும் தீயும் இட்டால்
சிறியனேன் என்தான் செய்வேன்?
வேறொரு பணியும் இன்றி
வேலநின் குன்றில் தங்கி
ஆறருள் முகங்கள் கண்டு
அனுதினம் வாழ்த்தல் கேட்டேன் 10

குனிந்தபோ தென்னைக் குட்டிக்
குனியவே வைப்பார் பின்யான்
துணிந்தபோ தென்னை வெட்டித்
தூக்கவே பார்ப்பார் வெட்சி
அணிந்தவேல் ஐயா ஞாலம்
அடியனேற் காகா தென்றே
கணித்துவுன் குன்றும் கேட்டேன்
கருணையால் காத்தல் செய்வாய் 11

தாலியைக் கட்டிக் கொண்ட
தாரமாய் உழைத்த பின்னும்
போலியாய் வாழும் பாவப்
பேரினால் போரைக் கண்டேன்
வேலுடன் நிற்கும் வெற்றி
வேந்தநின் பழநி வந்து
காலுடன் தலையைச் சேர்த்துக்
கவலையை மறத்தல் கேட்டேன் 12

எல்லையோ இல்லை துன்பம்
எதிர்எதிர் வந்து நிற்க
வெல்லவோ முடிதல் இல்லை
வேறிடம் தள்ளல் இல்லை
பல்லெலாம் போன பின்போ
பழநியில் சேர்த்தல் செய்வாய்
சொல்லரும் கருணைச் செவ்வேள்!
சோர்ந்தனன் காத்தல் கேட்டேன் 13

ஐம்பொறிக் கடிமை ஆகி
அபலையின் உடமை ஆகி
வம்பராம் மக்கள் பெற்று
வாடலே கடமை ஆகி
இம்பர்யான் காணும் துன்பம்
இம்மியும் அறிந்தி ராயோ?
எம்மலை உற்றாய் ஐயா!
எழில்மலை பழநி கேட்டேன் 14

கனவுகொல்? வாழ்வும் இங்குக்
கானலின் நீருந் தான்கொல்?
நினைவன நொடியில் மாறி
நிகழ்வன வேறு ஆக
அனலினுள் புரண்டு அந்தோ
அலறிநான் துடிக்கின் றேனே!
எனைஉன தோங்கும் குன்றில்
என்றுமே காத்தல் கேட்டேன் 15

வையமாம் வாழ்வில் பாழும்
வயிற்றினைக் காக்க வாடிப்
பொய்யுடல் உண்மை பார்த்துப்
புரிந்தனன் பழநி வேலோய்!
மெய்யுளாய் நின்னை யன்றி
மெய்யிதும் வேண்டேன் வேண்டேன்
துய்யநின் கோயிற் சுற்றித்
தினம்வலம் வருதல் கேட்டேன் 16

உருண்டு 'ஓம்' வேல்வேல் என்னும்
உயர்மொழி நாவில் ஊறி
உரைத்துயர் பழநிக் குன்றில்
உவகையால் உள்ளம் மீறிச்
சிரித்துப்பின் விழிகள் வாரச்
சிறிதுநான் அழுதும் அன்பால்
கரைந்திரு கைகள் கூப்பிக்
கந்தனே! வணங்கக் கேட்டேன் 17

ஒருநொடி பிரியின் ஐயா
உயிர்உடல் பறந்து போகும்
திருவடி தலையில் தாங்கித்
தினமுனைத் தொழுதல் கேட்டேன்
அருள்வடி வேலோய் வாழும்
அழகுயர் பழநிக் குன்றில்
தரும்படி சிறியேன் வேண்டும்
திருவரம் கேட்டல் செய்வாய் 18

எத்தனைக் காலம் செய்த
ஏற்றமோ திருமுன் நின்று
பத்தனாய் உருகிப் பாடிப்
பதமலர் பார்த்த பின்னால்
சொத்தெதும் வேண்டேன் வேறு
சுகமெதும் வேண்டேன் வேண்டேன்
நித்தமுன் உருவே காட்டும்
ஆடியாய் ஆதல் கேட்டேன் 19

எட்டவே இருந்து கண்கள்
கொட்டுதல் இன்றிக் கண்டும்
மட்டிலாக் கடலாம் ஆசை
மாறிடா தாத லாலே

சுட்டதாம் பொன்னாம் சோதிச்
சுடரென ஒளிரும் மேனிப்
பட்டிடும் நீறாய் ஆதல்
பழநிவாழ் பேறே கேட்டேன் 20

கமகம வெனம ணக்கும்
சந்தன மொடுபன் னீரும்
தமதம துளம்போல் தொண்டர்
தந்திடும் தயிரும் பாலும்
அம்பிகை பாலா! ஆகி
அங்கமே தழுவக் கேட்டேன்
அமுதென இனிக்கும் பஞ்சா
அமிர்தமும் ஆதல் கேட்டேன் 21

பணமுடை கண்டு வந்து
பணியினை வேண்டு வார்க்கும்
மனவினை செய்து நல்ல
மகவினை வேண்டு வார்க்கும்
கிணிகிணி எனமு ழங்கிக்
குமரநின் பெருமை கூறும்
மணியென வாகி வாட்டும்
மனத்துயர் மாற்றல் கேட்டேன் 22

அன்பினால் சூழும் கூட்டம்
அரகரா ஓம்ஓம் என்ன
நன்றினி விளைவ தெல்லாம்
நலமலால் வேறென் என்ன
கன்றிடும் அடியார்க் குண்டே
கந்தநின் பாதம் என்னப்
பொன்திருத் தேரில் பூட்டும்
பரிகளாய் ஆதல் கேட்டேன் 23

வளிகனல் நிலமும் நீரும்
வானமும் ஆனோய் வேலா
தளிர்க்கரம் நீட்டி வண்டும்
தேனுணப் பூத்துத் தொண்டர்
களித்தமர்ந் திளைப்பும் ஆறக்
கடும்பகல் போதில் நானே
குளிர்மரக் குடையும் ஆதல்
குன்றினில் கேட்டேன் கேட்டேன் 24

அறமன ஆன்றோர் ஈயும்
அளவிலாச் செல்வம் யாவும்
மறமன மாந்தர்க் கூட்டும்
முத்தமிழ்க் கல்விக் காகும்
திறமிதைத் தெரிந்து கொண்டேன்
திருடரை அணுக வொட்டா
உறுதியில் சிறந்த உண்டி
ஆதலும் கேட்டேன் கேட்டேன் 25

கங்கையை ஒத்து ஞாலம்
காத்திடும் கருணை யாறாம்
தங்கைசண் முகமு மாகிச்
சரவணப் பொய்கை ஆகி
முங்கியே அன்பர் மூழ்கி
முருகநின் பெருமை போற்றப்
பொங்கிடும் அன்பில் கேட்டேன்
புனிதனே காத்தல் செய்வாய் 26

பாவியாய் வாழ்ந்து பின்னும்
பரமநின் பெருமை ஓர்ந்து
ஆவியைக் காப்பான் வேண்டி
அழகமர் குன்றம் வந்து
சேவடி சார்வார் வாழ்வும்
செயம்செயம் என்றே கூவும்
சேவலும் ஆதல் செவ்வேள்
செந்திலே கேட்டேன் கேட்டேன் 27

தயவினோய் வாழும் எல்லை
தர்மமும் வாடக் கண்டால்
புயலெனச் சீறி விண்ணில்
பறந்துநீ பாவம் வெல்ல
மயிலென மாறல் கேட்டேன்
மறுத்திடல் முறையா காதே
அயலவர்க் கருளிச் செய்தோய்
அடியனேற் கருளக் கேட்டேன் 28

கல்லென ஆதல் உண்டேல்
குமரநின் மன்றில் கேட்டேன்
புல்லெனப் போதல் உண்டேல்
பேரருள் குன்றில் கேட்டேன்
சொல்லிய ஒன்றும் ஆகும்
செய்தவம் இல்லே னாகில்
புல்லிய பேயும் ஆகிப்
பழநியே சுற்றல் கேட்டேன் 29

அன்றுளாய் இன்றும் உள்ளாய்
என்றுமே உள்ளாய் நின்பால்
ஒன்றினி பேசேன் வார்த்தை
ஒரிணை இல்லா வேலோய்!
கன்றுநான் காக்கா விட்டால்
காலடி விடுதல் செய்யேன்
நின்னுடன் நீயே யாகி
ஒன்றுதல் கேட்டேன் கேட்டேன். 30

ஓம் சரவணபவாய நம ஓம்
ஓம் சண்முக குகாய நம ஓம்.

★★★

# திருநீலகண்டர் வாழ்க்கை சொல்லும் நீதி

- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

## இல்லறத்தே துறவியான திருநீலகண்ட குயவனார்

வாழ்க்கையை 2 வகையாக உணரலாம். 1. இன்பத்தை தேடும் முயற்சி. 2. உண்மையைத் தேடும் முயற்சி. பெரும்பாலான மக்கள் இன்பத்தைத் தேடும் முயற்சியிலேயே, துன்பம் துயரம், துக்கம், சலிப்பு, வெறுப்பு என்னும் வேதனைகளை அனுபவிக்கின்றனர். இடை இடையே இன்பத்தின் சுவையும் அவர்கள் மனத்தாக்குகளில் தட்டுப்படும் போது அதுதான் தமது நோக்கம் என்னும் முடிவு வலுப்படுகிறது. ஆனால் உண்மையைத் தேடி உணருவது தான் வாழ்க்கை என்பது அடியேன் அபிப்பிராயம்.

அவிழ்த்து விடப்பட்ட வெறிநாய்களைப் போல பொறிப்புலன்களை அலையவிட்டு கண்ணால் இன்பம், காதால் இன்பம், வாய்க்கு சுவையான உணவு, உடல் உணர்ச்சியை அனுபவிக்க விதவிதமான உடம்புகள் என்று இன்பத்தை தேடித்தேடி அலைகிறவர்கள் என்றைக்கு நிறைவடையப் போகிறார்கள்? சலிப்படைவது வேண்டுமானால் சாத்தியம். நிறைவடைவது என்பது சாத்தியம் இல்லை. இது தான் உண்மை. இவற்றினை உணர திருநீலகண்ட நாயனார் வரலாற்றை அறிந்தாலே போதும்.

சுந்தரர் பரவை நாச்சியாரை பிரிந்து தலயாத்திரை செய்ததைப்போன்று, நாமும் அடியார்களின் வாழ்க்கையில் தலயாத்திரை செய்யப் புறப்படுவோம். பெருங்காட்டை எரிப்பதற்கு அதிக நெருப்பு தேவையில்லை, சிறிய தீப்பொறியே போதும், குடத்தில் உள்ள பாலை தயிராக்க ஒரு சொட்டு உரைமோரே போதுமானது. நம் ஜென்மத்து பாவங்களை போக்க நிறைய தெய்வங்கள் தேவையில்லை, ஒரு முறை அன்பினால் உருகி சொல்லும் இறை நாமம் ஒன்றே போதுமானது.


''முருகா என ஓர் தரம் ஓதும் அடியார்
முடிமேல் இணைதாள் - அருள்வோனே''

என்பது திருப்புகழ். இது அருணகிரியாரின் அத்தாட்சி பத்திரம், தருவதோ திருவடி இரண்டு. கூறுவதோ ஒரு திருநாமம்! இது எப்படி சாத்தியம்? இது ஞானிகளின் வாழ்க்கை அனுபவம், ஆன்மாவை சுற்றியுள்ள அழுக்கு சுமைகளை ஞானக்கனலாகிய இறைவனது திருநாமங்களில் ஒரு திருநாமம் என்னும் சிறு பொறியே எப்படி எரிக்கின்றது என்பதை அருள் பெற்ற அடியார்களின் வாழ்க்கையை உணர்ந்தாலே போதுமானது.

## திருநீலகண்ட குயவனார் வரலாற்றுக்கு வருவோம்

சுந்தரரால் புகழ்ந்து பாடப்பட்ட அறுபது நாயன்மார்களில் ஒருவரான திருநீலகண்டர் என்னும் சிவனடியார் வேதியர்கள் நிரம்பி வாழும் தில்லை மூதூரில் குயவர் குலத்திலே தோன்றியவர் ஆவார், பிறபல நாயன்மார்களது இயற்பெயர்கள் பெரிய புராணத்தில் கூறினபோதிலும் இவரது இயற்பெயரும், பெற்றோர்களின் பெயரும் என்ன என்று அறியப்படவில்லை, சிலர் பெரிய மனிதர்களாக பிறக்கிறார்கள். சிலர் முயற்சியால் பெரிய மனிதர்களாகிறார்கள். இன்னும் சிலர் பெரிய மனிதர்களாக ஆக்கப்படுகிறார்கள் என்பது ஒரு ஆங்கில கவிஞனின் விளக்கம். இது மனிதர்களுக்கு மட்டும் இருக்கும் சிறப்பு அல்ல, கிராமங்களுக்கும், நகரங்களுக்குமே இச்சிறப்பு உண்டு.

அரியக்குடி, செம்மங்குடி, முசிறி, சித்தூர் முதலிய கிராமங்கள் சரித்திர பிரசித்தியோ, புராண பிரசித்தியோ உடையவை அல்ல என்றாலும், மேற் சொன்ன நான்கு ஊர்களையும் இசையுலகில் அறியாதவர்கள் இல்லை. இசை மேதைகள் தோன்றியிருக்கிறார்கள் என்பது சொல்லாமலே விளங்கும், நீலகண்டம் நீலகண்டம் என்னும் நாமத்தையே இவர் உச்சரித்து வருவதால், இவரைக் காரணம் பற்றியே திருநீலகண்டர் என்றே அழைக்கலாயினர், இவர் பெயர் குறிக்கப்படாது போதிலும் இவர் குலாலர் குலத்திலே தில்லை மூதூரில் பிறந்தார் என்பதில் ஐயம் ஒன்றும் இல்லை. ஆதாரம் திருத்தொண்டத் தொகையில் இவரைக் குறிக்க வரும் பெயரிலே இவரது குலத்தை உறுதி செய்கிறது. மட்பாண்டம் செய்பவரை மதுரை பக்கம் வேளார் என்பர். இவர்களை வேட்கோவர் எனச் சேக்கிழாரால் கையாளப்பட்டுள்ளது. மண்கலயங்கள், அடியார்களுக்கு திருவோடு முதலியன செய்து சிவனடியே சிந்தித்து வாழ்ந்தார் என்பது சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னரே சுந்தரது திருத்தொண்டர் தொகை மூலம் உறுதி செய்யப்படுகிறது. சென்னையில் இக்குலத்தொழிலை நாளது வரை கடைப்பிடித்து வாழும் பகுதிகளில், சென்னையைச் சேர்ந்த, சூளை -





குயப்பேட்டை என்ற பகுதியும் ஒன்றாகும். மண் பாண்டம் செய்யும் தொழிலுக்கு பெருமை சேர்த்தவர் திருநீலகண்டரே ஆவார், மண்ணை மூலப்பொருளாகக் கொண்டு எவ்வித ரஸாயன சேர்க்கையும் இன்றி எந்த சீதோஷ்ண நிலைக்கும் பொருந்தும் வகையில் அன்றும், இனி எக்காலத்தும் சிறப்போடு விளங்கு வதற்கு திருநீலகண்டரால் கையாளப்பட்ட மண் பாண்டம் செய்யும் குயவர் தொழிலே எடுத்துக் காட்டு ஆகும்.

முருகப் பெருமானின் திரு அவதாரத்தைப் பற்றி கூற வந்த கச்சியப்பர்

''ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன்
உலக முய்ய''

என்ற அளவிலேதான் கந்தபுராணத்தில் பாடியுள் ளார், இவரது பாடல் சேக்கிழார் பாடலை விட இரண்டு மாற்று குறைவு. சேக்கிழாரோ சுந்தரது ஜனனம் பற்றி கூறுகையில் ''தீதகன்று உலகமுய்ய திரு அவதாரம் செய்தார்'' என்கிறார். என்ன தீது? அடியார் பெருமையை அறியாத பெருந்தீங்கு அன்றைய நாளிலே உலகில் இருந்தது. இதனைக் களையும் பொருட்டு விறல்மீண்ட நாயனாரை கருவூலமாகக் கொண்டு, தொண் டர்களின் பெருமைகளை பாடி அருள, இறைவனே சுந்தரரை திரு அவதாரம் செய்வித்தார் எனக் கருத தோன்றுகிறது.

''சிறப்புடைப் பொருளை முன்வைத்துக் கழறல்'' எனும் வாக்கினுக்கேற்ப நாயன்மார்களை குறித்து பாட வந்த சுந்தரர் முதலில் பாடும் தனி அடி யார் திருநீல கண்ட குயவனார் ஆவார். இதனை நோக்கின் ஏனைய அடியார்களின் தொண்டினைவிட இவரது வாழ்க்கைத் தொண்டு சிறப்பெனக் கருதப்படு கிறது.

சுந்தரர் திருநீலகண்டரைக் குறித்து பாடிய போது எதற்காக அவரது குலத்தையும் சேர்த்து பாடினார் எனும் ஐயம் தோன்றலாம், இவரது பெயரைக் கொண்ட இன்னொரு அடியார் திருத்தொண்டர் தொகையில் வருவதால் வாசகர்களுக்கு சந்தேகம் தோன்றாமல் இருக்கவே இவரது பெயரோடு குலம் சேர்த்துப் பாடி யுள்ளார். சுந்தரரோ இறைவனது திருவுள்ள நோக்கின் படி மண்ணுலகில் பரவையாரையும், சங்கிலியாரை யும் காதலித்து வாழ்க்கை நடத்தியவராவார். திருநீல கண்டரோ துறவு பூண்டு காடு செல்லாது இல்லறத் திலேயே வாழ்ந்து பெண் நலமுறாது வாழ்ந்தார். இதனால் இவரது பெருமையை குறித்து பாட வந்த பட்டினத்து அடிகளும் ''மாது சொன்ன சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லேன்'' என்று தாம் பாடிய மூன்று நாயன்மார்களில் திருநீலகண்டரை நடுவே வைத்து பாடியதால் இவரது தியாகம் சிறப்பு பெறுகிறது, நரம்பு முறுக்கேறிய காளைப் பருவத்தில் இல்லறத்தில் இருந்து கொண்டே கட்டிய மனைவி

யிடமே இன்பம் துய்க்காது வைராக்கியமாக வாழ்ந்து காட்டியவரின் சரித்திரத்தையே முதலில் பாடுவது சிறப் பாகும் எனக் கருதியே திருநீலகண்ட நாயனாரைக் குறித்து முதலில் சுந்தரர் பாடியுள்ளதில் வியப் பொன்றும் இல்லை.

ஆடவர்கள் தங்கள் மனைவியைத் தவிர, மற்றைய மங்கையர்களை காதல் நோக்கோடு பார்ப்பது கூடாது. சுந்தரர், கயிலையில் பூந்தோட்டத்தில் இரு மாதர்களையும், ஒருவரோடு ஒருவர் காதல் நோக்கோடு பார்த்ததின் விளைவே, பூலோகத்துக்கு வரநேர்ந்தது என்றால் இங்கிருந்தே வேற்று மங்கையர்களை மாறு பட்ட நோக்குடன் பார்ப்பவர்கள் எங்கே போவது? மூவாசைகளில், பெண்ணாசை ஒன்று மட்டும் எல்லா ஜீவராசிகளுக்கும் உண்டு.

இந்திரன், சந்திரன், விசுவாமித்திரர், காசிபர் போன்றோர்கள் எல்லாம் கெட்டது பெண்கள் மயக் கிலே தான் என புராணம் கூறுகிறது. இவர்களின் வர லாறுகளை கேட்டறிந்தாவது, ஆடவரும், பெண்களும், இனியாவது உணர்ந்தாலே போதும்.

ஒரு சமயம் கைலையில் உமாதேவியே, சிவ னிடம் ஏன் உங்களை சதாகாலமும் தொழும் சிவ னடியார்களுக்கு எந்தவரமும் கொடுக்கக் கூடாதா? எனவினவ, எம்பெருமான், இவர்களுக்கு இந்திரபதவி யும் நீண்ட ஆயுளையும், புத்திரபாக்யமும், நோயற்ற வாழ்வும் தருகிறேன் என்று திருவாய் மலர்ந்துள்ளார். என்ற போதிலும், எல்லா சிவனடியார்களும், இறைவ ரிடம் அவரவர்க்கேற்ற வரத்தினை அருள வேண்டு மென்று கேட்டுக்கொண்டதாக பெரிய புராணத்தில் எங்கும் குறிப்புகள் காணவில்லை, அதற்கு மாறாக இறைவனது திருடிகளில் இரண்டறக் கலந்து, மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்ததாகவே அறியப்படுகிறது.

உழைப்பின் அலுப்பால் மக்கள் உறக்கத்தில் தம்மை மறந்து இறைவனையும் கனவில் கூட காண இயலாது மறந்து விடுகின்றனர். திருநீலகண்டரோ எல்லாவற்றையும் மறந்து தன்னுள் தலைவனை (இறைவனை) கண்டு அவன் திருவடிக்கே தன்னை அர்ப்பணித்து கொண்டு வாழ்ந்தவராவர். அங்ஙனம் அவர் வாழ்ந்து காட்டியதால் அவரைப்பற்றி தெய்வச் சேக்கிழார் ''**நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார்**'' எனக் கூறுகின்றார். ஐம்புலன் களையும் அடக்கி வாழ்ந்ததோடு, தம் மனைவியிடம் அன்புறு புணர்ச்சி யின்மை, அயலறியாமை வாழ்ந்தார், இவர் சிற்றின்ப வாழ்க்கையை வெறுத்ததாலேயே, அதோடு தொடர்புடைய பொன்னாசையும், மண் ணாசையும் இவரிடம் தோன்ற வாய்ப்பில்லாது போய் விட்டது.

இதனைக்குறித்து, ''**எல்லாம் அற என்னை யிழந்த நலம் சொல்லாய் முருகா**'' என அருணகிரியார் கந்தரனுபூதியில் பாடியுள்ளது, எப்படி எனத் தோன்றும்? எல்லாவற்றையும் மறந்து உறங்கும்போது, நமக்கு ஆறுதல் கிடைப்பதைக் கண்கூடாக அறிகிறோம். எத்தனையோ வேதனைக்களுக்கிடையே நின்று புழு வைப்போல் துடிக்கும் ஒருவன் கண்ணயரும் போது ஆறுதல் பெருகிறான்.

பசியில்லாத ஒருவனை நோக்கி, இந்த உணவை அருந்தாதே என ஆணையிட்டால், அவனுக்கு அது சிரமமாகுமா? மிகப்பசித்த ஒருவனை நோக்கி இந்த உணவை சாப்பிடாதே என்று ஆணையிடும்போது அவன் உணவை வெறுத்திருப்பதே பெருமையும், அருமையும் ஆகும். நீலகண்டர் திருவினும் உருவின் மிக்க மனைவி இருந்தும் கூட ஒரு பரத்தையை விரும்பி னார். திருநீலகண்டர் மனைவி இயல்பான தோற்ற முடையவள் எனக் கூறாது, திருவினும் மிக்க அழ குடையவள் என இதையும் சேக்கிழார் குறிப்பிட்ட தற்குக் காரணம் உண்டு. ஆண்களின் ஒழுக்கக் கேட்டை நியாயப்படுத்த நினைக்கும் பலர் ''மனைவி யிடத்து உள்ள குறையே காரணம் என பழிச்சுமத்துவது இயல்பாகவே அமைந்துவிட்டது. இப்படி ஒரு பழி வரக்கூடாது என்று எச்சரிக்கையாகவே, அவரது மனைவியைப்பற்றி விளக்கம் முதலிலேயே கொடுத்து விட்டார், அவருடைய சிற்றின்ப உணர்ச்சியெனும் புயலினால் அலைந்தது நம் கதாநாயகருக்கு ஒரே ஒரு பலவீனம், எந்த உயிரின் தலையிலும் இயற்கை எழுதி வைத்த இயல்பான சபலம். ஒழுக்கம் என்ப தாக சமூகம் கட்டி வைத்த வேலிகளை விலக்கிக் கொண்டு வெளியே போய் வருகிற வெள்ளாட்டு புத்தி. ஆண்மை அக்ரமம் பரத்தையை அணைந்ததால் தானே, வாழ் நாள் முழுவதும் பெண்நலமுறாது நிற்கும் தன்மை ஏற்பட்டது, இருப்பினும் அதனினும் பன் மடங்கு பக்தி இறைவன் மீது இருந்தது, அதனால் அவருடைய இறையன்பு வேகம் மாதர்பால் இருந்த சிற்றின்ப வேகத்தை வென்றது, இவரைப்போன்று புலன்களை வென்றவர், 5 கண்டத்திலும் இல்லை. அதனால் அவரை ''பேதியா ஆணை கேட்ட பெரியவர்'' எனச் சேக்கிழார் புகழ்கின்றார். இறைவனும், ''**வென்ற ஐம்புலனால் மிக்கீர்**'' என இவரை அழைத்துப் பெருமை செய்கின்றார்.

நரை, தீரை, மூப்பு என்பது தேவர்கட்டும் உண்டு, அவைகளை நீக்கப் புலன்களை அடக்க வேண் டும், இதனை அருணகிரியார்,

''யானாகிய என்னை விழுங்கிவெறும்
தானாய் நிலைநின்றது தற்பரமே''

என கந்தரனுபூதியில் பாடியுள்ளதைக் கவனிக்கலாம்.

இனி கதைக்கு வரலாம்

ஒரு நாள், நீலகண்டர் ஆலயம் சென்று திரும்பிய சமயம், பொது மகள் ஒருத்தி எச்சில் பாத்திரம் கழுவி, வெளியே ஊற்றினது அவ்வழியே சென்ற திருநீலகண்டர் மீது பட்டது, அதைக் கண்டு மனம் தாளாது, அவரை உள்ளே அழைத்து அவர் மேல் பட்டிருந்த எச்சில் உணவை நீக்கி, புத்தாடை அணி வித்து சந்தனம் போன்ற வாசனைப் பொருள்களை பூசி அனுப்பினாள். இப்படி கதை வளர்கிறது. உபமன்யூ விலாசம் இதன் பிறகு அன்னாரின் மனைவி அவரை ஒதுக்கினாள் என்கிறது. அவ்வாறு ஆசையை துறப்பது திருநீலகண்டருக்குப் பெருமையாகாது என்பதே சேக்கிழாரின் கருத்து, குற்றமே புரியாத திருநீல கண்டரை குற்றம் புரிந்ததாக மனைவி நினைத்து வெறுத்திருந்தால் அவரது கற்பு நெறி என்னவாகும்? சேக்கிழார் தமது வரலாற்றில் இவ்வாறு கூறவில்லை. இன்பத் துறையில் எளியரான திருநீலகண்டரின் உள்ளம் உண்மையாகவே ஒரே ஒரு முறை தவறி விட்டது எனப் பெரியபுராணம் கூறுகிறது. வீட்டில் விதவிதமான சாப்பாடு ருசியாக செய்திருந்தாலும், ஒட்டல் சாப்பாடு என்று நாக்கைச் சப்புகொட்டும் நபர்கள் மாதிரி, திருநீலகண்டரும், இளமை மீதூற இன்பத்துறையில் எளியரானார், அதாவது வேலியைத் தாண்டும் வெள்ளாடு, இதுதான் தெய்வச் சேக்கிழா ரின் எழுத்தாளர் பண்பு, திருநீலகண்டர் பரத்தையர் கள் மேல் விருப்பமுடையவர் என்பதைக் கொச்சை யாக கூறாது கோடிட்டுக் காட்டி விட்டு அடுத்த செய்திக்குப் பயணமானார்.

இவர்களிருவரும் இவ்வழக்கை நீதிமன்றத்தில் வாதாட நேர்ந்தால், இன்றைய துப்பறியும் நாவலாசியர் யாரேனும், திருநீலகண்டர் கதையை எழுத நேர்ந்தால், அவர் எங்கே எப்படி எப்படி கெட்டுப் போனார் என்பதை விவரமாக சுவைப்பட குறைந்தது 20 வாரங் கள் எழுதி இலக்கியச் சேவை புரிந்துவிட்டு, படிக் கிறவன் மனம் பாழான பிறகு இறைவனருளால் திரு நீலகண்டர் ஞானியானார் என்று கடைசி வாரம் கதையை முடிப்பார். சேக்கிழார், வாசகர்களின் வாழ்வை வீணாக்கித் தம் வயிறு வளர்க்கும் நாலாந்தர எழுத் தாளர் அல்லவே. இன்ப நாட்டம் வலிமை பெற்றது. அவர் மன உறுதி எளிமைபெற்றது எனும் வார்த்தைக் கோவையில் வழுக்கி விழுந்த வரலாற்றை ஒளித்து வைத்தார், அதேசமயம் வாசகர்களை உணரவும் செய்தார், ஒரு நாள் திருநீலகண்டர் பரத்தைபால் நண்ணி, பொருளையும், மகிழ்ச்சியையும் பண்ட மாற்று செய்து கொண்டு வீட்டுக்குள் நுழைந்தார், சாமர்த்தியமாக அவர் மறைத்துக்கொண்டாலும், இவரது மனைவியின் உள்ளுணர்வே கண்டு பிடித்துக் கொடுத்து விட்டது. பரத்தையரிடம் சென்று வந்த கணவனை விழிகளால் அளந்தார். விலகினார். விலகி னார் உடலாலும், உள்ளத்தாலும்; காரணம் மான உணர்ச்சி என்கிறார் சேக்கிழார். அழகில் மிகுந்த தாம் இருக்க தம்மை விலகிவேறொருத்தி அழகு தேடி அணைத்தது தம் அழகுக்கு அவமானம் என்ற மான உணர்ச்சியா? தன்னிடம் உள்ள உணர்ச்சி கணவன் பால் அந்த நாணம் இல்லையே என்கிற அவமான உணர்ச்சியா? இல்லற நெறியில் கணவனது அவமானம், தன்னுடைய அவமானம், கணவன் பழி தன்பழி என் றாகிறபடி மேலிட்டுக்கொண்ட மான உணர்ச்சியா? இது கணவனிடம் குற்றம் காணும் மனைவியை நீதிபதி ஸ்தானத்தில் நிறுத்துமே தவிர, நெருக்கத்துக்கு உத வாது.

இவர்களது வாழ்க்கை வைராக்யத்தோடு பல ஆண்டுகள் கழிந்தன, முதுமையும் தேடி வந்தன, இதனை அறிவிக்க வந்த சேக்கிழார் ஒரு புரட்சி செய் கிறார்.

''வளமலி இளமை நீங்கி வடிவுறு மூப்பு வந்து
தளர்வொடு சாய்ந்தும் அன்பு தம்பிரான்
திறத்துச்சாயார்''

இப்பாடலில் வடிவுறு மூப்பு வந்து எனப் பாடியதில்தான் சேக்கிழாரின் புரட்சி வெளிப்படுகிறது. மூப்பு என்றால் முதுமை. அழகு இளமையில் இருக் கும். இதுதான் உலக நியதி, ஆனால் சேக்கிழாரோ, நீலகண்டரை மூப்பில் அழகு எனக் கூறியதில் உள்ள கருத்தை ஆராய்வோம், தெய்வத்தமிழில் பாடிய பாடல் அல்லவா அது? உதாரணத்திற்கு வாழைக்காயையும், வாழைப்பழத்தையும் பார்த்தால் விளங்கும். காய் அழ காய் இருக்கிறதா? பழம் அழகாய் இருக்கிறதா? இதே போன்று மாங்காய் அழகா? மாம்பழம் அழகா? ஆகவே பழம் என்றால் அழகாயிருக்கும். கிழம் என்றால் எப்படி இருக்கும்.

காந்தியடிகள் சிறுவயதிலிருந்து கிழவராக உள்ளது வரையில் உள்ள புகைப்படங்களைப் பாருங் கள், அவருக்கு இளமையில் அழகு இல்லை, முதுமை யில் பொக்கை வாயராக இருக்கும்போது அழகாய் இருக்கிறார், அதே போன்று இராமகிருஷ்ணர் பட்டினத்தடிகள், தபோவனம் ஞானானந்த ஸ்வாமி கள் பாம்பன் குமரகுருதாஸ் சுவாமிகள் போன்றோர் முதுமையில் தரும் காட்சியே ஒரு அலாதி.

(அடுத்த இதழில் நிறைவு பெறும்)

★★★

# சென்னை அருள்மிகு ஸ்ரீ காளிகாம்பாள் திருக்கோயில் தல வரலாறு

- இராஜேஸ்வரி விஸ்வநாத

யாது மாகி நின்றாய் - காளி!
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் - நின்றன்
செயல்க ளன்றி இல்லை
போதும் இங்கு மாந்தர் - வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதி சக்தி, தாயே - என்மீது
அருள் புரிந்து காப்பாய்.

உலகப் பிரசித்தி பெற்ற இந்த வரிகளை மகா கவி சுப்ரமணிய பாரதியார் அவர்கள் பாடினார்கள். பாரதியார் அவர்கள் சென்னை பிராட்வேயில் உள்ள சுதேசமித்ரன் அலுவலகத்தில் பணிபுரிந்த சமயம் சென்னைத் தம்புச்செட்டித் தெருவில் வீற்றிருக்கும் அன்னை ஸ்ரீ காளிகாம்பாள், கமடேஸ்வரர் ஆலயத் திற்குத் தினமும் வழிபட வந்திருக்கிறார். அப்படி வந்த நாட்களில் அவர் ஒருநாள் பாடிய பாட்டின் முதல் வரி தான் 'யாது மாகி நின்றாய் - காளி' எங்கும் நீ நிறைந்தாய்'' இந்தப் பாடல் நமக்கெல்லாம் அன்னை சக்தி எங்கே இருக்கிறாள் என்ற ஞானத்தையும், தெய்வீக அறிவை யும், உணர்வையும் தந்து கொண்டிருக்கும்.

கற்பனைக்கும் எட்டாத அற்புத அருளைத் தரும் அன்னை, சென்னை ஸ்ரீ காளிகாம்பாள், கமடேஸ் வரர் ஆலயத்தை விஸ்வகர்மாக்கள் சுமார் 400 ஆண்டு களுக்கு முன்னர் தம்புச்செட்டித் தெருவில் நிர்மாணித்து திருக்கோயில் எழுப்பினர் என்பது வரலாறு. அதற்கு முன் அவர்கள் வணங்கிய மாகாளியை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் இருந்து வணங்கி வந்தனர் என்பதும் வரலாறு. இப்படிக் கோட்டைப் பகுதியில் குடியிருந்ததால் கோட்டையம்மன் என்று அழைக்கப் பட்டவர் அன்னை.

காளிகாம்பாளைச் செந்தூரம் பூசி வழிபட்ட தால், 'சென்னம்மன்' என்றும் போற்றினர். சென்னம்மன் குப்பமே பின்னர் சென்னை மாநகரமானது. சென்னை யம்மனை 'சென்னம்மன்' என்று தெலுங்கரும், கருநாடகரும் அழைத்தனர். இன்றும் அவர்தம் மொழி களில் இந்நகரைச் 'சென்னபுரி' என்றே அழைக்கின் றனர், என்று இத்திருக்கோயிலின் முன்னாள் அறங்காவலர் அமரர் மகாவித்வான் பண்டித வி. நடேச னார் அவர்கள் தம்முடைய ஆய்வுக் குறிப்பு ஒன்றி கூறியுள்ளார்.

இத்திருக்கோயில் பற்றிய விரிவான வரலாற்று குறிப்புகளை எச்.டி.லோவ் என்னும் ஆங்கிலேய எழுதி வைத்திருப்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வ திருக்கோயில், சென்னை நகரில் உள்ள பிரசித்தி பெற் திருக்கோயில்களில் ஒன்றாகும்.

மகரிஷி ஒருவர், ஒரு காலத்தில் நைமி சாரண்ய தில் உள்ள மகரிஷிகளைப் பார்த்து காஞ்சிபுரம் திருவண்ணாமலை ஆக இரண்டு தலங்களையு ஏக காலத்தில் கண்டு தரிசித்துக் கருணைப் பெ வதற்கு மகிமை மிகுந்து தலம் எது என்று கேட் போது, சூத புராணிகர் சொன்னதாவது:

''பூர்வம் ஒரு காலத்தில் பஞ்ச பூத தலங்களி ஒன்றான அருணையும் காஞ்சியும் சேர்ந்த மகிமை மிகுந்த தலம், இந்திரன், குபேரன், விராட் புருஷரா ஸ்ரீ விஸ்வகர்மா ஆகியோர் வழிபட்ட தலம், கடலை தீர்த்தமாகவும் சிவசக்தி தலமாகவும், இரண்டு பூதங்க இணைந்த தலம், பரதபுரி, சொர்ணபுரி என்றெல்லா வழங்கப்படும் இஷ்ட காம்யார்த்த சித்திகளைச் சீக்கிர தில் அளிக்கும் சிவசக்தி தலம் காளிகாம்பாள் இலங்கு இத்திருத்தலமே.''

''ஸசாமர ரமாவாணி ஸவ்ய தட்சிண ஸேவிதா - என்று லலிதா சஹஸ்ரநாமத்தில் கூறியுள்ள இர வரிக்கு லக்ஷ்மி தேவியும், ஸரஸ்வதி தேவியும் த னுடைய வலது பக்கத்திலும், இடது பக்கத்திலு வெண்சாமரத்துடன் நின்று சேவிக்கப்படுபவள் என்ப கருத்து. இத்திருக்கோயிலில் லக்ஷ்மி, ஸரஸ்வதி இ வரும் ஸ்ரீ அம்பாளுடன் இணைந்திருப்பதால் கல் யும் செல்வமும் சேர்ந்து அமையும் என்பது உறு யாகிறது. மகா லக்ஷ்மியும் மகா ஸரஸ்வதியும் த இரு கண்களாகத் தன்னகத்தே அமையப் பெற்றவ ஸ்ரீ காளிகாம்பாள் இவ்வாதலின், செல்வமும், கல்விய குவிந்துள்ள திருநகரமாக சென்னை விளங்குகிறது.

காளிகாம்பாளைப் பற்றி பல கவிஞர்க பாடியிருக்கிறார்கள்.



அன்னையவள் காமாட்சி அருள்வடி வுடனே
சென்னையிலே வாழ்வதனைச் செழித்திட வந்தாள்
முன்னைவினைப் பாவங்களை முறியடித்து வரும்
பின்னைவினைத் தடுத்திடவே பேரருள் தந்தாள்.

தனிக்கோலம் கொண்டிருக்கும் தாயவள் சக்தி
தமிழ்ப்புலவன் பாரதிக்குத் தனல்கவி தந்தாள்
திருக்கோலம் கொண்ட வளாய்த் தம்புத் தெருவினில்
திரிபுவனி அருளாசி தந்திட வந்தாள்.

## ருக்கோயில் அமைப்பும் சிறப்பும்

'துவஜஸ்தம்பத்திற்கு' கிழக்கே உள்ள கர்ப்பக் ருகத்தினுள் அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் அர்த்த த்மாசனத்தில் பாச, அங்குசத்தைக் கையிலேந்தி கமலத் ல் புன்னகை செய்கிறாள். பத்மத்தில் மூன்று அவுணர் ள் சிரம் மட்டும் செதுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ அம்பாள் மற்கு நோக்கி அமர்ந்திருப்பது இவ்வாலயத்தின் னிச்சிறப்பாகும். கல்வி கேள்விகளுக்கு உரிய திசை ாக மேற்கு திசையைக் கூறுவார்கள். நாவில் சரஸ்வதி ாய், நற்றுணையாய்க் காளிதாசனுக்கு இருந்து அருளிச் சய்தவள் அன்னை காளியல்லவா?

அன்னையின் திருவடியில் அர்த்தமேரு அமைந் ள்ளது.

மூலவர் உட்பிரகாரத்திற்கு மேற்கில் உற்சவர் ண்டபம் அமைந்துள்ளது. ஸ்ரீ அம்பாள் பெரியநாயகி ற்சவர்) மகாதேஜசுடன், மகாலட்சுமியையும் சரஸ்வதி யையும் இருபக்கங்களிலும் கொண்டு உயிரோவியம் போல், நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறாள். இவ் வம்பாளே கிண்ணித் தேரில் திருவீதி வலம் வருகிறாள். ஸ்ரீ அம்பாள் சிறிய நாயகி (உற்சவர்) பெரும்பாலும் கோயில் பிரகாரத்தில் வலம் வருவாள். பிரகார மண்டபத் திற்குக் கிழக்கில் சிற்ப வேலைப் பாடுகளுடன் கருங் கல்லினாலான பதினாறுகால் மண்டபம் அழகுற அமைந்துள்ளது.

இத்தலத்தில் கமடேஸ்வரர், அருணாசலேஸ் வரர், விநாயகர், சுப்ரமணியர், வீரபத்திரர், விராட் விஸ்வபரபிரம்மா, வீரப்பிரம்மேந்திர ஸ்வாமிகள் நாகேந்திரர் ஆகியோருக்குத் தனித்தனி சந்நிதிகள் இருக் கின்றன.

நவக்கிரஹங்களின் சந்நிதி திருக்கோயிலின் உட்பிரகாரத்திலேயே அமைந்திருக்கின்றது.

ஸ்ரீ நடராஜர் சந்நிதியில் பிருங்கி மஹரிசியைக் காணலாம்.

இத்திருத்தலத்தின் தீர்த்தம் கடல்நீர். தல விருட்சம் மாமரம், தீர்த்தத்துக்குரிய பரிவார தேவதை கடற்கன்னி என்பனவாகும்.

## வரலாற்றுச் சிறப்பு

இவ்வாலயமானது கி.பி. 1639 - ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே அமைக்கப்பட்டு பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

கருணையின் பேரொளியாம் கண்கண்ட தெய்வம் ஸ்ரீ காஞ்சி பரமச்சாரிய பெரியவர்கள் ஸ்ரீலஸ்ரீ சந்திரசேகரேந்திர சுவாமிகள், காமகோடி பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ ஜெயேந்திர சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ பன்றி மலை சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ காயத்திரி சுவாமிகள் மற்றும் பற்பல சமயப் பெரியோர்களும், ஆதீன கர்த்தாக்களும், சத்ரபதி சிவாஜி, மகா கவி பாரதியார் போன்றோரும் இவ் வாலயத்திற்கு விஜயம் செய்து இவ்வாலய அன்னையை வழிபட்டு ஆலய வரலாற்றுக்குச் சிறப்புத் தேடித் தந்துள்ளார்கள். மகாலட்சுமியும், மகா சரஸ்வதியும் தன் இருபக்கத்தே அமையப்பெற்றவள் ஸ்ரீ காளிகாம் பாள் ஆதலின் செல்வமும் கல்வியும் குவிந்துள்ள திருநகராகச் சென்னை விளங்குகின்றது.

## தனிச்சிறப்பு

விஸ்வகர்ம சமூகத்தினரின் அதிதேவதை களாகிய ஸ்ரீ விராட் விஸ்வப்பரப்பிரம்மத்திற்கும், ஸ்ரீ காயத்ரி தேவிக்கும் வெளிப்பிரகார மண்டபத்தில் தனித்தனியே சந்நிதிகள் உள்ளன. இந்தியா முழுமை யிலும் வேறு எங்கும் இல்லாத தனிச்சிறப்பாகும் இது.

வடக்கு மண்டபத்திலுள்ள ஸ்ரீ அகோர வீர பத்திரருக்கு, பௌர்ணமி தினத்தன்று வெற்றிலை மாலை சார்த்தி பக்தர்கள் வழிபடுகிறார்கள். 6 மாதம் பௌர்ணமிகளில் தொடர்ந்து வெற்றிலை மாலை சாற்றி வர, நினைத்த காரியம் வெற்றியடைவதைக் கண்டு பக்தர்கள் மகிழ்கிறார்கள். பௌர்ணமியன்று பெரும் குவியலாக வெற்றிலை மாலை சேர்ந்துவிடும்.

ராகுகாலத்தின் போது (குறிப்பாக செவ்வாய்க் கிழமைகளில்) ஸ்ரீ துர்க்கையின் சந்நிதி எதிரில் எலுமிச்சம்பழம், நெய்விளக்கு ஏற்றி வழிபடுவது அரிய காட்சியாகும்.

கண்ணைக் கவரும் கிண்ணித் தேர் - 'இந்தியா விலேயே வேறு எங்கும் இல்லாத புகழ்பெற்ற ஸ்ரீ சக்கர கிண்ணித்தேரை அருள்மிகு காளிகாம்பாள் கமடேஸ் வரர் திருக்கோயிலில்தான் காண முடியும். ஆண்டு தோறும் பிரம்மோற்சவத்தின் போது, ஏழாம் நாளன்று காலையில் இரதோற்சவம் பூந்தேராகவும், ஒன்பதாம் நாள் இரவில் 'கிண்ணித்தேர்' என்னும் அற்புத ஸ்ரீசக்கர ரதம், வெண்கலக் கிண்ணிகளால் அலங்கரிக்கப்பட்டு அருள்மிகு காளிகாம்பாள் பவனி வருவது கண் கொள்ளாக் காட்சியாக இருந்து வந்தது என்று ஆங்கி லேய வரலாற்று ஆசிரியர் திரு. எச்.டி. லோவ் என்பவர் தமது 'சென்னை நகர வரலாறு' என்னும் நூலில் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வெள்ளி ரதம்

ஸ்ரீ அம்பாளுக்கு வெள்ளியினாலான அழகான சிறிய இரதம் உள்ளது. பக்தர்கள் வேண்டிக் கொண்டு சிறிய தொகை செலுத்தி இரதத்தில் அலங்கரிக்கப் பட்ட அம்பாளை வைத்து பவனி வருகிறார்கள். கோவிலின் பிரகாரத்திற்குள் ஒருமுறை சுற்றிக்கொண்டு வருகிறார்கள். வாழ்க்கை இரதத்தை ஓட்டக் கஷ்டப் படும் அன்பர்களின் வாழ்க்கையெல்லாம் அன்னை யின் வெள்ளி இரதத்தை இழுத்ததும் நிவர்த்தியாகி விடுகிறது. வாழ்க்கை இரதத்தை எளிதில் இழுக்க முடிகிறது என்று பக்தர்கள் நினைக்கிறார்கள்.


கிழக்கே உள்ள இராஜ கோபுரம் சென்ற ஆண்டு (2001) ஜனவரி மாதம் 29ஆம் தேதியன்று மகாகும்பா பிஷேகம் செய்யப்பட்டது. இலட்சக் கணக்கான பக்தர் கள் மகா கும்பாபிஷேகத்தை நேரில் கண்டு பக்திப் பரவசத்தில் திளைத்ததோடு, சென்னைத் தொலைக் காட்சி நிலையத்தினரால் படம் பிடிக்கப்பட்டு தொலைக் காட்சியில் காட்டப்பட்டதால் பல இலட்சக் கணக்கான நேயர்களும் கண்டு களித்தார்கள். அன்னை ஸ்ரீ காளிகாம்பாளின் அருளைப் பெற்றார்கள்.

'நாளெல்லாம் திருநாளே, நமை காக்க அவள் வருநாளே' என்பதற்கிணங்க வருடம் முழுவதும் அன்னை ஸ்ரீ காளிகாம்பாளுக்கு விழாக்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. தமிழகம் தவிர மலேசியா, சிங்கப்பூர், கொழும்பு, மொரீசியஸ் நாட்டு அன்பர் களும் இங்கு வந்து அம்பாளைத் தரிசிக்கின்றனர்.

வைகாசியில் இங்கு பிரம்மோற்சவம் 10 நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறுகின்றது. ஆடிப்பெரு விழா பத்து ஞாயிற்றுக் கிழமைகளில் அபிஷேக அலங் காரங்களுடன் மிகச் சிறப்புடன் நடைபெறுகின்றது.

இங்கு அம்பாளின் அபிஷேக மஞ்சளின் மகிமை சொல்லற்கரியது. தீராத நோய்களைத் தீர்க் கிறது. குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கிறது.

இத்திருத்தலத்தில் தினந்தோறும் இரவு சுமார் 9 மணியளவில் அர்த்தஜாம பூஜை நடைபெறுகிறது. அவ்வமயம் பக்தர்கள் வீட்டிலிருந்து பால்காய்ச்சி சர்க்கரை, ஏலம், பாதாம் எல்லாம் இட்டு அன்னைக்குக் கொண்டுவந்து படைப்பதற்குத் தருகின்றனர். படைத்த பாலை பக்தர்களுக்குக் கொடுக்கின்றனர். 48 நாட்கள் தொடர்ந்து அர்த்தஜாமத்திற்கு பால் கொண்டு வரும் பக்தர்களுக்கு தீராத நோயெல்லாம் தீருகிறது. பக்தர்களின் நல்லெண்ணங்கள், நற்காரியங்கள் சித்தி யாகிறது என்று பக்தர்கள் அன்னைக்குப் பால் கொண்டு வருகிறார்கள். திருக்கோயிலுக்கு தினந்தோறும் வர இயலாத பக்தர்கள் அன்னையின் படத்திற்கு வீட்டி லேயே இரவு படுக்கும் முன் பால் நைவேத்யம் செய்து அன்னை ஸ்ரீ காளிகாம்பாளின் அருளைப் பெற்று மனமொத்த இல்வாழ்வில் சிறப்புறுகின்றனர்.



அன்னை ஸ்ரீ காளிகாம்பாளின் திருவருவப் படம் வாங்கி அதில் அவள் பாதத்திலிருந்து (வலது புறத்திலிருந்து இடதுபுறம் வரை) தினந்தோறும் காலையில் குளித்துப் பின் சந்தனக் குங்குமம் பொட்டு (ஒரு நாளைக்கு ஒரு பொட்டு) வைத்து வர ஒரு சுற்று முடிவதற்குள்ளேயே நினைத்த காரியம் வெற்றியடைகிறது, சித்தியடைகிறது என்று பக்தர்கள் நம்பிக்கையுடன் வழிபடுகிறார்கள்.

**திருவிழாக்கள்**

பங்குனியில் ஸ்ரீ அம்பாளுக்கு வசந்த நவராத்திரியும் சித்திரையில் குங்கும லக்ஷார்ச்சனையும், சித்திராப் பௌர்ணமியன்று சிறப்புத் திருவிளக்கு பூசைகூட்டு வழிபாடும் நடைபெறுகிறது. அவ்வமயம் திருவிளக்குப் பூசையில் கலந்துகொள்பவர்களுக்கு, அருள்மிகு காளி காம்பாள் திருவுருவம் பதித்த திருவிளக்கும், தட்டுடன் குங்குமப் பிரசாதமும் கொடுக்கப்படுகின்றது.

வைகாசி மாதம் ஸ்ரீ அம்பாளுக்கு பிரம் மோற்சவம் நடைபெறும். ஏழாம் நாள் இரதோற்சவம் பூந்தேராகவும், ஒன்பதாம் நாள் கண்ணைக் கவரும் கிண்ணித் தேராகவும் நடைபெறும். இரதத்தில் அம்பாள் வீதி உலா வருகிறாள்.

ஆனியில் வசந்தத் திருவிழாவும், ஆவணியில் பிள்ளையார் சதுர்த்தி உற்சவமும் நடைபெறும்.

புரட்டாசியில் ஒன்பது நாட்களும் நவராத்திரி விழா நடைபெறுகிறது. முதல் மூன்று நாட்கள் துர்கா, அடுத்த மூன்று நாட்கள் இலட்சுமி, அடுத்த மூன்று நாட்கள் சரஸ்வதியாகவும் அம்பாள் அருள் பாலிக்கிறாள். மேற்படி ஒன்பது நாட்களிலும் கன்யா பூசை நடைபெறும். விஜயதசமியன்று ஸ்ரீ அம்பாள் வீதி உலா வருவாள்.

ஐப்பசியில் ஸ்ரீ முருகப்பெருமானுக்கு ஸ்கந்த சஷ்டி லக்ஷார்ச்சனை விழா நடைபெறும். ஸ்ரீ வள்ளி தெய்வானைத் திருக்கல்யாணத்தின் போது விழாவிற்கு வரும் பெண்கள் யாவருக்கும் மஞ்சள் குங்குமத்துடன் திருமாங்கல்யச் சரடுகள் வழங்கப்படுகிறது.

கார்த்திகையில் தீபவழிபாடும், பிரதி சோம வாரங்களில் சிறப்பு வழிபாடும் நடைபெறுகிறது.

மார்கழி முப்பது நாட்களிலும் தனுர்மாத கூட்டு வழிபாடு காலை 4.30 மணி முதல் 6 மணி வரை நடைபெறுகிறது. மாணிக்கவாசகர் உற்சவம் 10 நாட்களுக்கு நடைபெறுகிறது. ஆருத்ரா தரிசனம், நடராஜப் பெருமானுக்கு உற்சவம் முதலான சிறப்பு வழிபாடுகளும் நடைபெறுகிறது.

தைப்பொங்கல் திருநாளன்று மாலையில் ஸ்ரீ அம்பாளுக்குப் பூச்சொரிதல் வழிபாடு நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சியாகும். மூன்றாவது வெள்ளிக்கிழமை மாலையில் அம்பாளுக்கு பட்டாபிஷேக உற்சவம் நடைபெறுகிறது. நான்காவது வெள்ளிக்கிழமையில் 108 திருவிளக்குகளின் வழிபாடும் நடக்கிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் சிறப்பு ஊஞ்சல், வெள்ளி தொட்டில், வெள்ளி ஊஞ்சல் உற்சவம் நடக்கிறது. இம்மாதம் தெப்பல் உற்சவமும் நடக்கும். அச்சமயம் ஸ்ரீ அம்பாள் தெப்பலுக்காக ஊர் வலமாக ஸ்ரீ கச்சாலீஸ்வரர் கோவிலுக்குப் புறப்பாடு நடக்கும்.

மாசியில் மாசி மக உற்சவம் நடக்கும். ஸ்ரீ அம்பாள் கடற்கரைக்குச் சென்று தீர்த்தமாடி பவனி வருகிறார்.

ஆகஸ்டு மாதம் 15ஆம் நாள் சமபந்தி போஜனமும், ஜனவரி 1 ஆம் தேதிக்காக நள்ளிரவு முழுதும் சிறப்பு வழிபாடும் நடைபெறுகிறது.

பொதுவாக எப்போதும் விழாக்கோலத்தில் இத்திருக்கோயில் காட்சியளிக்கிறது.

சீரும் சிறப்பும் பெருமையும் வாய்ந்த இத் திருக்கோயிலை தரிசித்து அனைவரும் சீரும் சிறப்பும் மனநிம்மதியும் பெறலாம். இத்திருக்கோயிலுக்கு சென்னை பிராட்வே சாலையிலிருந்தும், சென்னைப் பாரிமுனையிலிருந்தும், சென்னை பீச் ஸ்டேஷனிலிருந்தும் நடந்து செல்லலாம். மண்ணடியில் உள்ள தம்புச் செட்டித் தெருவில் அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் வீற்றிருந்து அருள்பாலிக்கிறாள்! ★★

# சிந்தனைத் துளிகள்

- டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி, சிங்கம்பட்டி

மூச்சு உயிரையும், உடலையும் பிணைக்கும் சங்கிலி.

புருவ மத்தியில் பல அனுபவங்களைப் பெறலாம்.

கடவுளுக்கு உருவம் கிடையாது.

தெய்வங்களும் தேவதைகளும் இறக்கும்.

சொர்க்கம் வேறு, முக்தி வேறு.

பரமுக்தியில் உயிர் இரண்டறக்கலக்கவில்லை, ஒன்றறக் கலக்கும். அதாவது ஒரு பெரிய பாத்திரத்தினுள் சிறிய பாத்திரம் அடங்குவதுபோல். பாலும், நீரும் கலப்பது போலன்று.

உயிர் எந்நிலைக்கு உய்வு பெற்றாலும் பிரபஞ்சம் செயல்பட ஆண்டவனால் ஆற்றப்படும் அடிப்படை ஐந்து கிரியைகளை செயல்படுத்தமுடியாது - உதாரணம் தாருகாவனத்து ரிஷிகள்.

ஆன்மாவிற்குத் தோற்றமும் கிடையாது. ஆகவே அழிவும் கிடையாது. உருவம் கிடையாது. ஆண் பெண் வேற்றுமையும் கிடையாது.

ஆன்மா உடலில் செயல்படும் போது உயிர் என்று அழைக்கப்படுகிறது.

மனம் என்பது ஆண்டவனால் இவ்வுடலில் சேர்க்கப்பட்ட அந்த கரணங்களுடன் கூடிய ஒரு கருவியே.

சிந்தனை வேறு, கவலை வேறு.

கஞ்சத்தனம் வேறு, சிக்கனம் வேறு.

ஞானம் வந்தால் இன்பம் வரும்.

ஞானம் வந்தால் அஞ்ஞானம் போகும். அஞ்ஞானம் போனால் ஆசை போகும். ஆசை போனால் பிறப்பு போகும். பிறப்பு போனால் இறப்பு போகும். இறப்பு போனால் துன்பம் போகும். துன்பம் போனால் இன்பம் வரும்.

வீரத்தைக் காட்டிலும் விவேகம் மேல்.

வீரம் வேறு, மூர்க்கத்தனம் வேறு.

காலம் பொன்னானது.

மரணத்திற்குப் பின் உயிரின் வாழ்க்கை தொடர்கிறது.

மீண்டும் மனித உடல் கிடைக்கும் என்று உறுதி இல்லை.

காதல் வேறு, காமம் வேறு.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

பொருள், உடல், உயிர் மூன்றையும் பேணுவது ஒரு பெரும் கலை.

மரணத்திற்குப் பின் தூக்கம் இருக்காது.

இவ்வுயிர் ஐந்து உடல்களால் பிணைக்கப்பட்டுள்ளது.

அன்பு வேறு பாசம் வேறு.

உருவேறினால் திருவேறும்.

நகைச் சுவை மனிதனுக்கு இன்றியமையாதது.

வேறுபட்ட ஆணும் பெண்ணும் நெருங்கிப் பழகக்கூடாது.

பணிக்கு புத்திசாலியான பிரகடக்காரனைக் காட்டிலும் விசுவாசமுள்ள அறிவிலி மேல்.

அறிவு வேறு, புத்திசாலித்தனம் வேறு.

ஆசையே பிறப்பிற்கு வித்து.

மரணபயம் நம்மை வாழவிடாது. ஆனால் அதை யாரும் தவிர்க்க முடியாது.

புண்பட்டால் மனம் பண்படும். (புண் பட்டால் பண்படுவோம்)

வேற்றுமை கருத்துக்களுடன் நாம் ஒற்றுமையாக இருக்கலாம்.

பழகப் பழக பாலும் புளிக்கும்.

சோம்பித்திரிவர் தேம்பி அழுவர்.

இளமையில் காமம் இனிக்கும், கல்வி கசக்கும். முதுமையில் கல்வி இனிக்கும், காமம் கசக்கும்.

மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.

''ஆலும் வேலும் பல்லுக்குறுதி''

''நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'' (நாலடியார்).

''பாலும் தேனும் உடற்குறுதி
வேலும் மயிலும் உயிர்க்குறுதி'' - வாரியார் சுவாமிகள்.

அன்போடும் அருளோடும் பொருளை ஈட்ட வேண்டும்.

சிற்றின்பம் ஆண், பெண் இருபாலரும் சுகிக்க ஆண்டவனால் அமைக்கப்பட்டது.

சொத்தை அனுபவிக்க குழந்தை வேண்டும் என்று நினைத்தால் பூஜ்யம் தான் தேர்வில். இறுதி சடங்கிற்கு குழந்தை வேண்டும் என்ற நினைத்தால் நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு. தான் செய்கின்ற தர்மத்தை தொடர்ந்து செய்வதற்கு மகப்பேறு வேண்டும் என்று எண்ணினால் நூற்றுக்கு நூறு விழுக்காடு.

மதத்தின் பேரால் உலகை ஏமாற்றுபவன் மீளா நரகத்தினை அடைவான் என்பது நிச்சயம்.

அறிவு வளர, வளர நம் அறியாமையும் கூடவே வளர்ந்து வரும்.

மனப்பக்குவம் என்பது ஒருவருக்கு சுமார் 45 வயதிற்கு மேல்தான் வரும். ஆகவே ஒருவர் அதுவரை முதியவர்கள் அறிவுரையை கேட்டு அதன்படி நடக்க வேண்டும்.

சீசர் மனைவி சந்தேகத்திற்கிடமின்றி நடக்க வேண்டும்.

எந்தக்கதவைச் சாத்தினாலும் கடவுளின் கண்ணை சாத்த முடியாது.

தானம் பெரிது, ஆயிரம் மடங்கு தானத்தைக்காட்டிலும் பெரிது அன்னதானம், ஆயிரம் மடங்கு அன்னதானத்தைக் காட்டிலும் பெரிது அறிவு தானம், ஆயிரம் மடங்கு அறிவு தானத்தைக் காட்டிலும் பெரிது நிதானம், ஆயிரம் மடங்கு நிதானத்தைக் காட்டிலும் பெரிது சமாதானம், பத்தாயிரம்

மடங்கு சமாதானத்தைக் காட்டிலும் பெரிது தெய்வ சன்னிதானம். (திருப்பெருந்திரு வாரியார் ஸ்வாமிகள்.)

சிவன் சொத்து குலநாசம்.

குலமகளுக்கழகு கொழுநனைப் பேணுதல், விலை மகளுக்கழகு மேனி மினுக்குதல், (அதிவீரராமபாண்டியர்)

பேசுகின்ற நாயை வேட்டைக்கு கொண்டு சென்றால் ''சூ பிடி என்றால், நீ பிடி என்றிடும்.''

ஜொலிக்கும் வாலிபம் நொடிக்குள் போய்விடும்.

நாரையும் திரையும் மரணம் வருவதற்கு முன் நமக்கு வரும் அறிவிப்புகள்.

அறியாமையை சொர்க்கமாக கருதும் இடத்தில் அறிவாளி ஒரு குற்றவாளியே.

முட்டாள்களிருக்குமிடத்தில்தான் களவாணி பெருகு வான்.

இயற்கை அன்னையின் எழிலில் மனதை இழப்பவன் இறையுணர்வுடன் இருப்பான்.

ஒழுக்கம் உயிரினும் பெரிது, காரணம் ஒழுக்கத்தில்தான் உயிர் ஓம்பப்படுகிறது.

வாழு, வாழவிடு (Live and let live)

அளவறிந்து வாழு, இல்லையேல் நிலைகுலைந்து போவாய்.

பிறப்பழிக்க நினைப்பவனுக்கு இவ்வுடல் ஒரு பாரம்.

ஒரு மனிதனின் ஒரு நாள் மூச்சு 21600.

இதனைக் குறைத்துப் பழகி வந்தால் ஆயுள் நீடிக்கும்.

தொட்டுக்கொடுக்காத வித்தை, சுட்டுப் போட்டாலும் வராது.

மாற்றானை வெல்வது கடினம், அதனினும் தன்னையே வெல்வது கடினம்.

புறப்பகையையும் வெல்ல வேண்டும்.

அகப்பகையையும் வெல்ல வேண்டும்.

நம்மை ஏமாற்றிய ஒருவனை மீண்டும் நம்பக் கூடாது. (ஆங்கிலப் பழமொழி)

நாள் என்பது நமது வாழ்நாளை அறுக்கும் வாள்.

இழந்த நேரத்தை மீண்டும் பெறவே முடியாது.

'கடினம்' என்று வழக்கில் ஒரு சொல்லுண்டு. அதனை தவிர்த்து மேலே செல்வது நமது கடமை (இரண்டாவது உலக மஹா யுத்தத்தில் ஒரு தளபதியின் வாக்கு).

உயிர் வாழ உண்ண வேண்டும். உண்ணுதற்கென வாழக்கூடாது.

ஏழ்மை வேறு, எளிமை வேறு.

ஈட்டி எட்டிய மட்டும் பாயும், பணம் பாதாள மட்டும்.

ஆடம்பரத்தைக் காட்டிலும் அத்தியாவசியம் மேல்.

துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.

கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே.

கண்ணாடி மாளிகையிலிருப்பவர்கள் கல்லெறியக் கூடாது.

சிறு துளி பெரு வெள்ளம்.

சற்று காலஞ்சென்று சேரலாம், காலஞ் சென்றவராகி விடாதே.

சுக்கிற்கு மிஞ்சிய மருந்துமில்லை; சுப்பிரமணிய ஸ்வாமிக்கு மிஞ்சிய தெய்வமும் இல்லை.

உண்மையான நண்பனுக்கு உயிரையும் கொடுக்கலாம். ஆனால் உண்மையான நண்பன் கிடைப்பது அரிதிலும் அரிது.

செய்யும் தொழிலே தெய்வம்.

கலியுகத்தில் பக்தி முக்தி தரும்.

மேதை நேரம் போதவில்லை என்று மனம் வெதும்ப மாட்டான்.

சூதும் வாதும் வேதனை செய்யும்.

காலை இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலை கடுக்காய் மண்டலம் உண்பார் கோலை ஊன்றி குறுகி நடப்பவர் கோவை விட்டு குலாவிநடப்பரே.

கற்பது வேறு - படிப்பது வேறு.

கற்றுத் தெளிய வேண்டியவைகளைக் கற்றுத் தெளியவும், (இதனால்தான் வள்ளுவப் பெருமான், ''கற்பவை'' என்று குறிப்பிடுகிறார்) ஆண்டவனால் நமக்கு அளிக்கப்பட்ட கடமைகளை ஆற்றவும், இறுதியில் பிறவித்துன்பத்தில் இருந்து வீடு பேறு அடையவுமே நமக்கு இவ்வுடல் கொடுக்கப்பட்டுள்ளது. உறுதியாக புலன் இன்பத்தை நுகர்வதற்கல்ல.

செய்த தர்மத்தை வெளியே சொன்னால் தற்கொலைக்குச் சமம்.

தற்பெருமை பேசினாலும் தற்கொலைக்கு சமம்.

''சிவனுக்கு மேலே தெய்வமும் இல்லை
சித்திக்க மேலே நூலும் இல்லை.''

மனமே சொர்க்கத்தை நரகமாகவும், நரகத்தை சொர்க்க மாகவும் காட்ட வல்லது. (ஆங்கில பழமொழி).

எதார்த்தவாதி வெகுஜன விரோதி.

இப்பூவுலக வாழ்க்கை இத்தனை நாட்கள் என்று நிர்ண யிக்கப்படவில்லை. இத்தனை மூச்சு என்று தான் நிச்ச யிக்கப்பட்டுள்ளது.

தானம் கிடைத்த மாட்டை பல்லைப் பிடித்துப் பார்க்கக் கூடாது.

புதரிலிருக்கும் இரண்டு பறவைகளைக் காட்டிலும் கையிலுள்ள ஒரு பறவை மேல்.

புத்தென்ற நாகத்திலிருந்து மீட்பவன் புத்திரன்.

மண வாழ்க்கை என்பது முற்றுகை இடப்பட்டக் கோட்டையைப் போன்றது, வெளியிலுள்ளவர்கள் உள்ளே செல்ல நினைப்பதும், உள்ளே உள்ளவர்கள் வெளியே வர நினைப்பதும் இயற்கை.

அகல உழுவதை விட ஆழ உழுவது மேல்.

வடக்கு நோக்கி பணப்பெட்டியிருந்தால் பணம் காலி யாகிக்கொண்டே போகும்.

நாள் நேரம் பார்த்துத் தங்கம் வாங்கவில்லை என்றால் நம் குடும்பமே அழிந்துவிடலாம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திருந்தால் மரணத்தை மகிழ்ச்சியுடன் தழுவலாம்.

கடவுளுக்கு மேல் குரு, ஏனென்றால் குருதான் நமக்கு கடவுளைக் காட்டமுடியும்.

# தமிழிசை மும்மூர்த்திகள்

– டி.எஸ். பாலு, எம்.ஏ., பி.எ

## முத்துத் தாண்டவர்

'தெருவில் வாரானோ', 'ஆடிக் கொண்டார்', 'சேவிக்க வேண்டுமையா', 'தெரிசித்தளவில்'... போன்ற பாடல்கள் தமிழிசை உலகில் மிகவும் புகழ் பெற்றவை. இவை போன்ற நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாடியவர் - முத்துத் தாண்டவர். தென்னகத்தில் கிருதி, கீர்த்தனை மரபுக்கு வழிவகுத்தவர்.

சிதம்பரம் நடராசப் பெருமான் மீது எண்ணற்ற கீர்த்தனைகளையும் பதங்களையும் இவர் பாடியுள்ளார். இவருடைய பதங்கள் அபிநயத்துக்கு மிகவும் சிறப் புடையன என்று இசைவல்லார் கூறுவர்.

முத்துத் தாண்டவர் சோழவள நாட்டில் சீர்காழி யில் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தவர். ஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட சீர்காழி சிவத் தலத்திற்கு நாள்தோறும் சென்று வழிபடுவது முத்துத் தாண்டவருக்கு வழக்கம். ஒரு நாள் வழிபடச் சென்ற தாண்டவர், களைப்பினால் அங்கேயே படுத்துறங்கி னார். சிறிது நேரம் சென்றபின் விழித்தெழுந்த தாண்ட வர், கோயில் குருக்களின் சிறு புதல்வியைப் போன்ற ஓர் உருவத்தைத் தன் முன் கண்டார்; வியப்புற்றார்.

''தில்லைக்குச் சென்று நடராசப் பெருமானை வழிபடுக! அங்கே அன்பர் கூட்டத்திலிருந்து எச் சொல் முதன் முதலாக வெளிப்படுகின்றதோ, அச் சொல்லையே முதலாக வைத்துப் பாடுக!'' எனக் கூறி அச்சிறு பெண் மறைந்து விட்டாள். பின்னர்தான் அவருக்குத் தெரிந்தது. 'தன்னிடம் அதுவரை பேசியது குருக்களின் மகள் அல்ல; இறைவியே!' என்று.

இறைவியின் ஆணையால் தில்லை சென்று வணங்கினார் தாண்டவர். அப்போது அடியார் கூட்டத்தி லிருந்து 'பூலோக கயிலாசகிரி சிதம்பரம்' என்ற குரல் வெளிப்படவே, அச்சொற்களையே முதலாகக் கொண்டு ''பூலோக கயிலாசகிரி சிதம்பரம் அல்லால் புவனத்தில் வேறும் உண்டோ!'' என்னும் பாடலைப் பாடி முடித் தார். நாளும் நாளும் அவ்வாறு பாடி உவகையுற்றார் முத்துத்தாண்டவர்.

ஒரு நாள் அடியார்களிடமிருந்து யாதொரு சொல்லும் வெளிப்படவில்லை. இருப்பினும் தாண்ட வர், அப்பேச்சின்மையையே முதலாகக் கொண்டு 'பேசாதே, நெஞ்சமே' என்ற பாடலைப் பா மகிழ்ந்தார்.

ஒரு நாள் சீர்காழியிலிருந்து சிதம்பரத்திற் வரும் வழியில் பாம்பொன்று அவரைத் தீண்டிய அதனால் மனம் கலங்காத முத்துத்தாண்டவர் ''அ மருந்தொரு தனி மருந்திது அம்பலத்தில் கண்டேே என்னும் பாடலைப் பாடி, விடம் நீங்கப் பெற்றார்.

இவ்வாறு அருஞ்செயல்கள் பல ஆற்றிய இனிய தமிழில் இன்னிசைப் பாடல்கள் பல பாடிய புகழ் பெற்ற முத்துத் தாண்டவர், ஆவணித்திங்கள் நன்னாளில் இறைவன் திருமுன் நின்று ''மாணி வாசகர் பேறு எனக்குத் தர வல்லாயோ...'' என்னு பாடலைப் பாடச் சிதம்பரத்திலிருந்து பேரொ யொன்று வெளிப்பட்டது. தாண்டவர் அப்பேரொ பிழம்பில் இரண்டறக் கலந்ததாக வரலாறு.

## மாரிமுத்தாப் பிள்ளை

முத்துத்தாண்டவரைப் போல் தில்லை நடரா பெருமான் மீது கீர்த்தனைகளும் பதங்களும் பாட மற்றோர் இசைப் புலவர் இவர். பதினெட்டாம் நூ ற்றாண்டைச் சேர்ந்த தமிழ் இசைப் புலவர், இவர் பிற ஆண்டு கி.பி. 1712.

''என்ன பிழைப்பு உன்றன் பிழைப்பையா'',

''எந்நேரமும் ஒரு காலைத் தூக்கிக் கொண் இருக்கிற வகை ஏதையா?'', ''உம்மைப் போல் ஆட் எடுத்து அம்பலத்தில் நிற்பார் ஒருவரைக் காணே ஐயா!'' போன்ற பல பாடல்கள், குரலிசைக் கலை களின் நாவில் என்றும் நடனம் புரியும் இனிய பாட களாகும். இசைப்பாடல்களில் இவர் பாடல் அ விற்குப் பொருள் செறிவுள்ள பாடல்களைக் காண அரிதென்று கூறுவர். மாரிமுத்தாப் பிள்ளை இயற் நூற்றுக்கணக்கான பாடல்களில் அச்சு வடிவம் பெற்ற இருபத்தைந்து. மற்ற பாடல்கள் அச்சாகும் நிலை இருப்பதாகக் கூறுகிறார் பேராசிரியர் தி.வ. மெய்கண்ட

மாரிமுத்தாப் பிள்ளை பாடிய பாடல்களில் நயங்களைக் காணுங்கள். 'ஒருக்கால் சிவசிதம்ப என்னும் பாடலில் - 'சிவ சிதம்பரம்' என்று கூறின

ாவங்களிலிருந்து விடுபட்டு முத்தி அடையலாம் ன்கிறார். ''காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே'' ன்னும் பாடலில் - மேல் உலகத்தோரான நந்தி, நாரதர் பான்றோர் யாழ், மத்தளம் போன்ற இசைக் கருவி ளைக் கையாண்டவர்கள் என்ற கருத்தை வெளிப் டுத்துகின்றார். ''ஏதுக்கித்தனை மோடிதான் உனக்கு ந்தன்மேல், ஐயா!'' என்ற பாடலில் - வேடிக்கையாகப் பசியதற்காக நடராசப் பெருமான் தம்மைக் கடிந்து காள்ளாதிருக்க வேண்டும் என்று கேட்கின்றார்.

மாரிமுத்தாப் பிள்ளையின் வாழ்வில் நடை பற்ற ஒரு நிகழ்ச்சியைப் பாருங்கள். பிள்ளை அவர் ளின் மூத்த புதல்வர் தெய்வரங்கன் பெருமாள் பிள்ளை ன்பவர். இவர் அறிவு மழுங்கி குடும்ப நினைவு றிதுமின்றி அலைந்து திரியலானார். இதனால் பரிதும் கவலையடைந்தார் பிள்ளை. அப்போது டராசப் பெருமான் இவரது கனவில் தோன்றி ''இவ் ருக்கு ஒரு பிரபந்தம் இயற்றினால் உமது கவலை ங்கும்'' என்று கூறி மறைந்தார். பிள்ளையவர்கள் றைவனின் கட்டளைப்படி 'புலியூர் வெண்பா' ன்னும் நூலைப் பாடினார். இதனால் அவர் தம் கனுக்கு நேர்ந்திருந்த மதிமயக்கம் நீங்கியது.


சிதம்பரேசர் விறலிவிடுதூது, வருணாபுரி ஆதி லிசர் குறவஞ்சி, ஆதிமூலிசர் நொண்டி நாடகம், லியூர்ச் சிங்கார வேலர் பதிகம், வியங்கேசர் பதிகம் கியவற்றையும் இவர் இயற்றியுள்ளார். 1787-ஆம் ண்டு சித்திரைத் திங்கள் 14-ஆம் நாள் இவர் இறையடி சர்ந்தார்.

## ருணாசலக் கவிராயர்

'இராம நாடகக் கீர்த்தனைகள்' என்று கூறியதும் லைஞர்கள் நெஞ்சில் நினைவுக்கு வருபவர் அருணா லக் கவிராயர். மயிலாடுதுறையை அடுத்துள்ள தில்லை ாடி என்னும் சிற்றூரில் நல்லதம்பி பிள்ளைக்கும் ள்ளியம்மைக்கும் 1711-ஆம் ஆண்டு இவர் பிறந்தார்.

இளமையிலேயே பெற்றோரை இழந்த இவர், ருமபுரம் சென்று பல்லாண்டுகள் அங்குத் தங்கி, மிழ் இலக்கிய இலக்கணத்திலும் சமய நூல்களிலும் க்க புலமை பெற்றார். இவருக்குத் தமிழறிவு ஊட்டிய ர் அம்பலவாணக் கவிராயர்.

பன்னூல்களில் அருணாசலக் கவிராயருக்குப் பிற்சி இருப்பினும் அவர் உள்ளத்தைக் கவர்ந்தவை ருக்குறளும், கம்பராமாயணமும் ஆகும். கம்பர் தம் ராமாயணத்தை அரங்கேற்றம் செய்த திருவரங்கத் லேயே தாமும் அரங்கேற்றம் செய்ய வேண்டும் என



விரும்பினார் கவிராயர். அவர் விருப்பத்திற்கு இடை யூறாகக் கோயில் அதிகாரிகள் முதலில் மறுத்துவிட்ட னர். ஆனால் அரங்கநாதப் பெருமானின் துணையால் கவிராயர் தம் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டார். தம் அறுபதாவது வயதில் 'இராம நாடகக் கீர்த்தனைகள்' என்னும் நூலைப் பாடினார் அருணாசலக் கவிராயர்.

'இராமநாடகக் கீர்த்தனைகள்' சிறந்ததோர் இசை நாடக நூலாகும். 'தரு' என்னும் இசைவடிவம் இதில் 197 முறை கையாளப்பட்டுள்ளது. இரண்டடிக் கண்ணிகளால் ஆன 'திபதை' என்ற பெயர் கொண்ட இசைப்பாட்டு 60 முறை கையாளப்பட்டுள்ளது. மேலும் கடவுள் வணக்கத்தைக் குறிக்கும் தோடையம் போன்ற இசை வடிவங்களும் கையாளப்பட்டுள்ளது. இந் நூலில் காணப்படும் மொத்த விருத்தங்கள் 268. வெண்பா, கொச்சகம், கலித்துறை போன்ற பாக்களும் காணப்படுகின்றன. நாற்பது இராகங்களை இந்நூலில் பயன்படுத்தியுள்ளார் கவிராயர். துவிஜாவந்தி, மங்கள கைசிகம், சைந்தவி ஆகிய அபூர்வ இராகங்களும் உண்டு.

தமிழிசைக்கும் இராமநாடகக் கதையைப் பரப்பு வதற்கும் தம் வாழ்நாளைச் செலவிட்ட அருணாசலக் கவிராயர் தம் 67-ஆவது வயதில் இறையடி சேர்ந்தார்.

தொன்மைத் தமிழ் இசை வளர்த்த சீர்காழி மூவர் பாடல்களையெல்லாம் தொகுத்து, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நூல்களாக வெளி யிட்டிருப்பது - தென்னக இசைக்கு அது ஆற்றியுள்ள தொண்டு என்பது நினைவு கூரத்தக்கது.

★★★

# "நீத்தம் இருபிடி சோறு கொண்டு இட்டு உண்டு இரு"

**- திருப்புகழ்த்தேனி**

அருணகிரியார் திருப்புகழ், திருவகுப்பு, கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, கந்தர் அந்தாதி ஆகிய நூல்களை இயற்றியருளியுள்ளார்.

திருப்புகழ்ச் சபைகளில் பெரும்பாலும், கந்தர் அந்தாதியையும், திருவகுப்பையும் பாடுவது கிடையாது. வள்ளிமலைத் திருப்புகழ் சுவாமிகள் மட்டுமே, தாம் தொகுத்த திருப்புகழ் பாராயணத் தவநெறித் திருமுறையில் மேற்கூறியுள்ள ஐந்து நூல்களில் உள்ள பாக்களையும் கையாண்டுள்ளார். அவரைப் பின்பற்றும் சபையினரும் இவ்வழக்கத்தை கையாள்கின்றனர்.

கந்தர் அலங்காரப் பாடல்களில் அருணகிரியார் கந்தனது புகழையும், அவன் வாகனம் கொடி ஆகியவற்றின் ஆற்றலையும் வெகுவாகக் கூறுகின்றார். இடுதலைப் பற்றி இவர் கூறியுள்ள கருத்துக்களை ஈண்டு காண்போம் -

''பொருபிடியுங்களிறும் விளையாடும் புனச்சிறு மான்
தருபி டி காவல சண்முக வா எனச் சாற்றி நித்தம்
இருபிடி சோறு கொண்டிட்டுண்டிரு வினையோ
மிறந்தால்
ஒருபிடி சாம்பரும் காணாது மாயவுடம் பிதுவே.''

நமக்குப் பரிமாறும் உணவிலிருந்து இரண்டு பிடி சோறு எடுத்து 'வள்ளிநாயகனே! சண்முகவா எனத்' தியானித்து ஏற்பவர்க்கு இட்டு வாழ வேண்டும் என்பது இவரது அறிவுரையாகும். இது நாம் அனைவரும் எளிதில் பின்பற்றக்கூடிய உபதேசம் ஆகும். வினைகளின் பயனாக ஏற்பட்ட இவ்வுடம்பு அழிந்தபின் (தீயில் வெந்து) அதிலிருந்து ஒரு பிடி சாம்பலும் கிடைக்கப் போவதில்லை என்பதையும் தெளிவு படுத்துகிறார்.

அடுத்து இன்னொரு பாடலைப் பார்ப்போம் :


''வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்திவறிஞர்க்
கென்றும்
நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்
நுங்கட் கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவாஉடம்பின் வெறுநிழல்
போல்
கையிற் பொருளும் உதவாது காணும் கடைவழிக்கே.''

இப்பாடலில் அருணகிரியார் வறுமை கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்கும் பங்கிட்டு வாழும் எளிய ஒன்றைக் காட்டுகின்றார். கதிர் வேலனை நினைத்துக் கொண்டு நொய்யில் ஒரு சிறு பிளவை யாவது என்றும் தவறாது வறிஞர்க்கு ஈந்து வாழுங்கள் என்கிறார். வெய்யில் காலத்தில் ஒதுங்க உங்கள் நிழல் உங்களுக்கே உதவாததுபோல் உங்கள் கைப்பொருளும் உங்கள் கடைவழிக்கு (இறுதி யாத்திரைக்கு) உதவாது போகும் என்றும் எடுத்துக் காட்டுகிறார்.

உம்மை நாடிவரும் யாசிப்பவர்க்கு இலைக் கறியாயினும் வெந்தது ஏதாகிலும் உதவுங்கள்; இந் நிலையான மாதவம் நீவிர் இறுதியில் செல்லும் தொலையாத வழிக்கு உங்களைத் தேடிக்கொண்டு வருகின்ற கட்ட முதும், உற்ற துணையுமாகும் என் பதனை உணர்மின்கள் எனக் கீழ்வரும் பாடலில் தெளிவுபடுத்துகின்றார்.

''மலையாறு கூறெழவேல் வாங்கினானை வணங்கி,
அன்பின்
நிலையான மாதவம் செய்குமினே நும்மை தேடிவரும்
தொலையாவழிக்குப் பொதிசோறுமுற்ற துணையுங்
கண்டீர்
இலையாயினும் வெந்ததேதாயினும் பகிர்ந்து ஏற்ற
வர்க்கே.''

குறக்குலப் பெண் வள்ளியை விரும்பும் குமரனை அன்புள்ளத்தோடு பாடிக் கசிந்து உருகி கையில் பொருள் உள்ளபோதே தருமம் செய்யாத வர்கள் பாவவழியில் பொருளை ஈட்டித் தானும் அநுபவிக்காமல் பிறரையும் அனுபவிக்க விடாமல் மண்ணில் புதைத்து வைத்துத் திருடர்களிடம் கொடுத்து அதனால் உள்ளம் உடைந்து உடல் மெலிந்து வருந்தி தமது ஆயுள் நாளை அவமே கழிப்பவர் ஆவர் என்ற கருத்தைக் கீழ்வரும் பாடல் விளக்குகிறது.



''வேடிச்சிகொங்கை விரும்பும் குமரனை மெய்யன்
பினால்
பாடிக்கசிந்துள் ளபோதே கொடாதவர் பாதகத்தால்
தேடிப் புதைத்துத் திருட்டில் கொடுத்துத் திகைத்
திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்
பவரே''

ஓசை மிகுந்த கடலில் வேலை விட்ட கந்தனின் அருளைப் போல யாசிக்கும் வறியவர்க்கு நீங்கள் இடும் தானத்தின் பலன் தப்பாது உதவும் பொருட்டு எவ்விடத்திலேனும் உங்களை நாடிவரும். அப்படி யன்றி யாசிப்பவருக்குக் கொடாமல் சேர்த்துப் பெட்டி யில் பூட்டி வைத்த பணமும் தங்கமும் சிங்கார வீடும், பெண்டிரும் ஏனையோரும் உயிர்போம் அத்தனி வழிக்கு துணையாகுமோ? சிந்திப்பீர் எனக் கீழ் வரும் பாடலில் கேட்கிறார்:

''பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள்
போலுதவ
எங்காயினும் வரும் ஏற்பவர்க்கிட்டதிடாமல் வைத்த
வங்காரமு முங்கள் சிங்கார வீடும் மடந்தையரும்
சங்காதமோ கெடுவீர் உயிர்ப்போம் அத்தனி
வழிக்கே''.

இவ்வுடலானது நீர்க்குமிழிக்கு நிகரானது. கையில் உள்ள செல்வமும் நம்மிடம் நிலையாக நிற்கக் கூடியது அல்ல. ஆராய்ந்து பார்ப்பின் இவை இரண் டும் மின்னலைப் போன்று மறையக் கூடியவை என தத்துவம் பேசும் சிலர் உள்ளனர். இவர்கள் தம்மிடம் பசித்துவந்து யாசிப்பவர்களுக்கு ஏதும் கொடுக்க மனம் இன்றி வேறு எங்கேனும் போவதுபோல் எழுந்து சென்று மறைந்து விடுவர். வேற்குமரற்கு அன்பு இலாத இவர்கள் ஞானம் மிக மிக நன்றாக யிருக்கின்றது என நையாண்டி செய்கிறார். இக்கருத் துள்ள பாடலைப் பார்ப்போம்.

''நீர்க்குமிழிக்கு நிகரென்பர் யாக்கை நில்லாது
செல்வம்
பார்க்குமிடத் தந்தமின்போலுமென்பர் பசித்து வந்தே
ஏற்குமவர்க்கிட என்னில் எங்கேனு மெழுந்திருப்
பார்
வேற்குமரற் கன்பிலாதவர் ஞானமிகவுநன்றே.''

''படிக்கின்றிலை பழனித் திருநாமம்'' என்ற பாடலில்,

''ஏநெஞ்சமே முருகன் திருநாமத்தை ஓதவில்லை,
ஓதுவாரையும் வணங்கவில்லை, ஏற்பவர் மனம்
வாடாது தானமிட்டு வறியனாகவில்லை. ஆகவே
நமக்கு ஏதுதஞ்சம்?''

எனக் கூறி இட்டுண்டு வாழ அறிவுறுத்துகின்றார்.

தடுமாறும் மனத்தைத் தடுத்து, வேண்டாத வெகுளியை விட்டொழித்து, தானத்தைத் தவறாது கடைப்பிடித்து எதுவரினும் இருக்கும் நிலையிலேயே இருந்து வாழுவோமாக. குவலயம் உய்யக் குன்றைக் கிழித்த குமரனருள் தானே வந்து வெளிப்படும் என்ற கருத்தமைய

''தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளித்தான
மென்றும்
இடுங்கோள் இருந்தபடியிருங்கோள் எழுபாரு
முய்யக்
கொடுங்கோபச்சூருடன் குன்றம் திறக்கத்தொளைக்
கவைவேல்
விடுங்கோன் அருள்வந்து தானே உமக்கு
வெளிப்படுமே.''

என்றும் பலவாறாக அருணகிரிநாதர் பாடியருளி யுள்ள பாடல்களிலிருந்து இடுதலின் இன்றியமை யாமையை உணர்ந்து, அதனை வாழ்வில் கடைப் பிடித்து நற்கதி அடைவோமாக.

★ ★ ★

# தட்சிணாமூர்த்தி திருவருட்பா - விரிவுரை

- பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A., D.Litt., Ph.D.

*10) இறுமாந்த பெருவாழ்வு*

அண்டர் தொழும் இந்திராதி வாழ்வையும்
விரும்பிடேன்,
அட்டதிக்கையும் விரும்பேன்,
அகில கலைஞானமும் விரும்பிடேன், உலகு புகழ்
அரிய கீர்த்தியும் விரும்பேன்,
பண்டை மலம் எல்லாம் ஒழித்து நின் அருள்பெற்ற
பழைய அடியார்கள் அடியார்
பாத தாமரைகள் என் தலைமேல் வைத்தருட்
பார்வையால் இருளகற்றித்
தொண்டு செய்தரிய பரமானந்த வெள்ளம்
துதைத்து விளையாடி, உலகம்
தோன்றாமல் இறுமாந்திருக்கின்ற பெருவாழ்வு
தொண்டனேன் வேண்டினேன் வண்டு
உண்டிடும் கொன்றையணி அண்டர் நாயகா! கயிலை
உறைகின்ற பரதெய்வமே!
ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரமசிவமே!

கொன்றை மலர் ஈசனுக்கு மிகவும் உகந்தது. தன் வடிவால் பிரணவத்தை ஒத்திருப்பது கொன்றை. பிரணவப் பொருளான பெருமான் அதனை விரும்பி அணிகிறான்.

வண்டுகள் மொய்த்துத் தேனை உண்ணுகின்ற புத்தம்புதிய கொன்றை மலரை அவன் அணிந்திருக் கிறான்.

''வண்டு குடி கொண்ட குழல் கொண்டை விழி வள்ளி மணவாளா!'' என்று சுவாமிமலை நவரத்தின மாலை வருணிக்கிறது. அந்த அடியின் சந்தச் சாயல் ''வண்டு உண்டிடும் கொன்றையணி அண்டர் நாயகா!'' என்ற இடத்தில் அமைந்துள்ளது.

அவன் அண்டர் நாயகன், அதாவது, தேவர் களின் தலைவன், மகாதேவன்.

அண்டர் தொழும் அப்பெருமான் தன் அடிய வரை அண்டர் தொழும் இந்திரன் முதலான உயர் பதவியில் அமர்த்தி இன்ப வாழ்வை அருள வல்லவன்.

மண்ணுலகை ஆண்டு, சுவை கண்ட மன்னர் களில் சிலர் விண்ணுலகை ஆளும் இந்திரப் பதவியை எய்திட வேண்டி 'அசுவ மேதம்' முதலான வேள்வி களைச் செய்வார்கள். இதிகாச புராணங்கள் அத் தகைய வரலாறுகளைக் கூறுகின்றன.

ஆனால், இறையனுபவத்தில் ஆழ்ந்தவர்கள் ''இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண டேன்'' என்றே உரைப்பர். அவ்வகையில் சுவாமிகளும் ''அண்டர் தொழும் இந்த்ராதி வாழ்வையும் விரும் பேன்'' என்றார்.

தவஞ் செய்வோரில் பலர் தன்னலங்கருதி அட்ட சித்திகளையும் விரும்புவார்கள். வெகு சிலர் இறையருளால் கிட்டும் சித்திகளை உலக நலன் கருதி மட்டுமே செயற்படுத்துவர்.

இராமபக்த அனுமார் அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றிருந்தார்.

1) பூதவுடலை அணுவுருவாக்குவது 'அணிமா' என் னும் சித்தி. அனுமார் அரக்கிகளுடன் போரிட்ட பொழுது அதனைப் பயன் படுத்தினார்.

2) பெரிய உருவம் கொள்ளும் ஆற்றல் 'மகிமா' எனப்படும். அனுமார் பேருருக் கொண்டதைப் பற்றி இராமாயணத்தில் தனிப் படலமே வருணிக் கிறது.

3) அனுமார் வான் வழியே கடலைக் கடந்து செல்ல 'இலகிமா' என்னும் காற்றை விட இலேசாக்கிக் கொள்ளும் சித்தியைக் கையாண்டார்.

4) பீமனால் அனுமாரின் வாலைச் சற்றும் அசைக்க முடியவில்லை என்பது மகாபாரத வரலாறு. அது 'கரிமா' என்னும் பளுவாக்கிக்கொள்ளும் சித்தி யாகும்.

5) 'பிராப்தி' என்பது அனைத்தையும் அடக்கி யாளும்திறமை. அகத்தியர்போன்ற முனிவர்களும் இராவணன், சூரன் போன்ற அசுரர்களும் அவ் வாற்றலைப் பெற்றிருந்தனர்.

6) 'வசித்வம்' என்பது தன்வயப்படுத்தும் ஆற்றல். சைவசமயக் குரவர்களும், ஆழ்வார்களும் அத் தகைய ஆற்றலைப் பெற்றிருந்தனர். அடங்காத ஐம்புலன்களையும் தன் வயப்படுத்துவதுதான் சிறந்த 'வசித்வ' சித்தியாகும்.

7) 'பிரகாமியம்' என்பது கூடுவிட்டுக் கூடு பாயும் ஆற்றல். திருமூலர், அருணகிரிநாதர் போன்றோர் அத்தகைய ஆற்றலைப் பெற்றிருந்தனர்.

8) எண்ணிய அனைத்தையும் செய்து முடிக்கும் பேராற்றல் 'ஈசத்வம்' எனப்படும். இறைவனுக்கு நிகரான ஈசத்வ ஆற்றலைச் சம்பந்தர் முதலானவர் பெற்றிருந்தனர். விஷத்தால் மண்டவனை உயிர்ப் பித்தது, எலும்பைப் பெண்ணாக்கியது போன்ற அற்புதங்கள் ஈசத்வ சித்தியே ஆகும்.

இவை எட்டும் அட்டமாசித்திகள். இவை எட்டும் அபரசித்திகள் எனப்படும். சாதாரண உலகியல் வாழ்வுக்கு உதவிடும் சித்திகள் இவை.

தன்னையே அணுஉருவாக்கி அணுவுருவான இறைவனுடன் இரண்டறக் கலத்தல் 'பர அணிமா' எனப்படும். எஞ்சிய ஏழு சித்திகளின் வாயிலாகவும் இறைவனுடன் ஒன்றாகும் நிலையை அடையலாம். அவை மனிதனை முத்தி நிலைக்கு உய்த்துவதால் 'பர சித்திகள்' என்று புகழப்பட்டன.

இச்சித்திகளின் வழியே இறைவனுடன் இரண்டறக் கலப்பதால்தான் மகான்கள் மரணம் அடையும் பொழுது அதனைச் ''சித்தி அடைந்தார்'' என்ற சிறப்புச் சொற்றொடரால் குறிப்பிடுகிறோம்.

சித்திகளின் சிறப்பு இவ்வாறிருந்தாலும் அவை தமக்கு வேண்டாம் என்கிறார் சிவஞான தேசிகர்.

''அறுபத்து நான்கு கலைகளில் தேர்ச்சி வேண்டுமா?'' என்றால் அதுவும் வேண்டாமென் கிறார்.

சிலர் புகழுக்காக உயிரைக் கொடுத்த வரலாறுகள் உண்டு.

''நீர்க்குமிழி போன்ற புகழை பீரங்கி முனையிலும் எய்த எண்ணுவர்'' என்று ஷேக்ஸ்பியர் குறிப்பிட்டுள்ளார்.

''தன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயு'' எனக் கம்பர் கூறுகிறார்.

ஆனால், சுவாமிகள் ''உலகு புகழ் அரிய கீர்த்தியும் வேண்டேன்'' என்றார்.

இறைவனின் அருட்பார்வையால் முதலில் அறியாமை இருள் அகல வேண்டுமென விண்ணப்பிக் கிறார்.

மும்மலங்கள் உயிர்களைத் தொன்று தொட்டு பற்றித் தொடர்கின்றன. எனவே, அவை பண்டை மலம். இவற்றை இறைவன் அருளால் அழித்த அடியார்க்கும் அடியார்கள் உள்ளனர் அல்லவா?

அச்சான்றோர்களின் திருவடிகளைத் தமது தலைமேல் வைத்து அவர்களுக்குத் தொண்டு செய்யும் பேறு வேண்டுமென்கிறார். அத்தகைய தொண்டில் மூழ்கிவிட்டால் பிறகு உலகியல் நினைப்பு ஏது? எனவே, அந்த நிலையில் உலகம் தோன்றாது. அந்தப் பேரானந்த வெள்ளத்தில் திளைத்து நீந்தி விளையாடுவதே வேண்டும். அந்த நிலையே உண்மையான இறுமாப்புடன் வாழலாகும். அதுவே தாம் தட்சிணா மூர்த்தியிடம் வேண்டுவது என்கிறார்.

''வேண்டேன் புகழ், வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்''

என்பார் மாணிக்கவாசகர்.

அடியார் சேர்க்கை தீய நட்பை விலக்கிடும்.
தீநட்பு அகல்வதால் மோகமாயை விலகிடும்.
மோகமாயை விலகிட சஞ்சலம் அகலும்.
சஞ்சலம் அகன்றிட ஜீவன் முத்தி கிட்டும்.

இதனை ஆதிசங்கரர்

''சத் சங்கத்வே நிச்சங்கத்வம்
நிச்சங்கத்வே நிர்மோ கத்வம்
நிர் மோ கத்வே நிச்சல தத்வம்
நிச்சல தத்வே ஜீவன் முத்தி''

என்றார்.

அடியார் சேர்க்கையும், தொண்டும் இறுதியில் ஜீவன் முத்தி நிலையில் கொண்டு சேர்க்கும்.

அந்த அடியார் தொண்டு வாய்த்திட ஆலமர்ச் செல்வனின் அருளை வேண்டி, தமது திருவருட்பாவை நிறைவு செய்கிறார் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞான தேசிக பரமாச் சாரிய சுவாமிகள்.


ஆதிகுரு ஆலமர்ச் செல்வன் தட்சிணாமூர்த்தியின் அருட்பார்வை ஆயிரங் கோடி நலன்களை அள்ளி வழங்கட்டும்.

*(நிறைவு பெறுகின்றது)*

★★★

# ஓம் சக்தி

- கவிஞர் சொ. பொ. சொக்கலிங்கம்



ஓம் சக்தி, ஓம்சக்தி, ஓம் சக்தி, ஓம்,
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்

அனைத்தையும் படைத்தவள் அன்னை சக்தி,
ஆக்கலின் ரகசியம் அவளின் சக்தி,

இதயத் துடிப்பின் இருப்பிடம் சக்தி,
ஈர்த்திடும் மூச்சில் இணைந்தவள் சக்தி

உயிராய், உருவாய் உதிப்பவள் சக்தி
ஊழ்வினை, வல்வினை ஒழிப்பவள் சக்தி,

எல்லாம் ஒன்றாய் இருப்பவள் சக்தி,
ஏற்றத் தாழ்வை எரிப்பவள் சக்தி,

ஐம்புலன் அடங்கினால் ஆர்த்தெழும் சக்தி,

ஒளியிலும் ஒலியிலும், உறைபவள் சக்தி,
''ஓம்எனும் மந்திர உறைவிடம் சக்தி,

ஔவியம் ஒழிப்பவள் அன்னை சக்தி,
அஃதெனும் மும்மலம் அழிப்பதும் சக்தி.

ஓம்சக்தி, ஓம்சக்தி ஓம் சக்தி ஓம்.
ஓம் சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்.

★★★

# ஸ்ரீ துளசிதாஸர்

– திருமதி மீனாட்சி கோகுலவாசன்

உலகமகாகாவியங்களுள் ஒன்று ராமாயணம். தமிழ்நாட்டில் வால்மீகி ராமாயணமும், கம்ப ராமாயணமும் எப்படிப் போற்றிப் புகழப்படுகின் றனவோ அதுபோல வட நாடு முழுவதும் போற்றிக் கொண்டாடப்படும் ஒரு சிறந்த மகா காவியம், ''ராம சரிதமானஸம்'' என்ற பெயர் பெற்ற துளசிராமாயண மாகும். ஹிந்தி இலக்கியத்தின் படைப்புக்களுக்கு ஆதி புருஷராகக் கருதப்படுகிறார் கோஸ்வாமி துளசி தாஸர்.

இவரது அற்புதமான அருட்கவிதைகளின் பெருக்கு, சரிதத்தோடு நின்றுவிடவில்லை. 'விநய பத்ரிகா' என்ற ஒரு நூலாகவும், வெவ்வேறு வகை யான தனிப்பாடல்களாகவும் உருவெடுத்து மக்களது மனத்துள் தெய்வபக்தி, நல்லொழுக்கம் பண்பாடு முதலியவைகளை வளர்த்து வாழ்வை வளம் செய்விக் கிறது.

துளசிதாசரின் காலம், 'அக்பர் பாதுஷாவின்' காலமாகும். அக்பர் முகலாய சக்ரவர்த்திகளுள் மிகச் சிறந்தவர் என்று பெயர் பெற்றவர். அவருடைய காலம் பொற்காலமாகும்.

அக்பர் ஹிந்துக்களை ஆதரித்து வந்தவர் என்பது சரித்திரப்பிரசித்தம். அவருடைய சபையிலே ஆத்மாராம் என்று ஒரு பிரதான மந்திரி இருந்தார். அவரின் ஆத்மஞான பலத்தால் அவருக்கு நன்மக னாகத் தோன்றினார் 'கோஸ்வாமி துளசிதாசர்.'

ஆத்மாராம் ஸ்வாமி கல்வி கேள்விகளில் சிறந்தவர்; அரசியல் நிபுணர் : அக்பர்பாதுஷாவின் பெரும்மதிப்பையும், பெரும் பதவிகளையும் பெற்ற வர். அவர் தர்பாருக்குச் செல்லும் பொழுதெல்லாம் தமது அருமை மைந்தன் துளசியையும் அழைத்துச் செல்வார்.

இளமையிலேயே கல்வியுடன், அரசவைப் பழக்கமும் சேரவே, அவர் சிறந்த அரசியல் மேதை யாகவும் விளங்கினார்.

ஆத்மாராம், தன் மகன் துளசிக்குத் தக்க வயது வந்தவுடன், தமது சுற்றத்தைச் சேர்ந்த 'மமதாபாய்' என்னும் குணநலம் நிரம்பிய அழகியை மணம் செய் வித்தார்.

துளசிதாசரது கல்வியையும், அரசியல் ஞானத் தையும் நன்றாக அறிந்த பாதுஷா, தந்தையின் பதவியை அவருக்கு அளித்து, தந்தையினும் மேலாகக் கௌரவித் தார்.

ஆனால் இறைவனின் திருவிளையாடல் துளசி யின் பக்கம் திரும்பியது. துளசிதாசர் வாழ்வை, உலகத்தை ஞானமார்க்கத்தில் திருப்புவதற்குப் பயன் படுத்த வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார்.

ஆத்மாராம், துளசியிடம் ''உன் தாயை நன்றாகக் கவனித்துக் கொள்ளு. பாதுஷா உனக்கு அளித் துள்ள பதவியில் நீ நற்பெயர் எடுக்க வேண்டும். நான் தீர்த்த யாத்திரை சென்று வருகிறேன்,'' என்று சொல்லிப் புறப்பட்டுச் சென்றார்.

செல்வத்தின் செருக்கும், அடக்குவார் இல்லாத தாலும் துளசிக்கு கூடா நட்புக்கள் பெருகின. பரத்தை யர் நேசம் ஏற்படலாயிற்று. தாய் மகனுக்கு எவ்வளவோ புத்திமதிகள் சொல்லியும் பயன் இல்லை. மகனிடம், ''மகனே! இந்தப்பழக்கமெல்லாம் உனக்கு வேண்டாம். உன் தந்தைக்கு இது எட்டினால் வேதனைப்படுவார். பாதுஷா உன்தந்தையிடம் வைத்திருந்த மதிப்பை நீதான் காப்பாற்றி நற்பெயர் எடுக்க வேண் டும்'', என்றாள்.

அதற்கு துளசியோ, ''எனக்கு இந்தப் பதவி கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை, தந்தைக்காகத் தான் பார்க்கிறேன்,'' என்றார்.

துளசியின் தாய் தன்மகனின் கூடா ஒழுக் கத்தைப்பற்றி உண்மையான நண்பர் ஒருவர் மூலம் தன் கணவருக்குச் சொல்லியனுப்பினாள்: அது கேட்ட ஆத்மாராம் நொந்த மனத்துடன் வந்தார். மகனை நல்வார்த்தைகள் சொல்லி, வேசிகள் நேசத்திலிருந்து மீட்டு அழைத்து வந்தார்.

பிறகு துளசிதாசருக்கென்றே ஒரு சோலை யிலே வீடு கட்டிக்கொடுத்து எல்லா வசதிகளுடனும் வாழ வழிவகுத்து விட்டு, ஆத்மாராம் மீண்டும் யாத்திரைக்குச் சென்றார்.

துளசி இப்பொழுது பெண் பித்தராய் வீட்டிலேயே அடைப்பட்டுக் கிடந்தார். சிலமாதங்கள் கழிந்தன.

துளசியின் தாயார், ''மகனே! எந்த நேரமும் 'மமதா, மமதா என்று மனைவியையே சுற்றி வருகிறாயே, மறுபடியும் பாதுஷாவிடம் போக வேண்டாமா?'', என்று கேட்டாள்.

அதற்கு துளசியும், ''எனக்குத்தெரியும், சமயம் வரட்டும் போகிறேன்'', என்றார்.

பாதுஷாவும் 'பிறர் சொல்வதெல்லாம் உண்மை தான் போலும்! நாமே நேரில் சென்று பார்ப்போம்,' என்ற முடிவுக்கு வந்தவராய் தம் பரிவாரங்களுடன் ராஜாப்பூருக்கு வந்து, தாம் வந்த செய்தியைச் சொல்லி அனுப்பினார்.

அக்பர் பாதுஷாவிடமிருந்து அழைப்பு வந்தது! 'பாதுஷா டெல்லிக்கு அழைப்பார், உடனே அங்கு மமதாவை அழைத்துச் செல்ல இயலாது; ஆகவே இல்லை என்று சொல்லிவிடுவோம்' என்று எண்ணியவர், வந்தவர் அறியாமலிருக்க ஒளிந்து கொண்டார்.

மமதாதேவிக்கு ஏற்கனவே கணவர் செயல்களில் வெறுப்பு. இப்பொழுது கோபமும் வந்தது. அதனால் அவள் துளசிதாசரிடம், ''நீங்கள் பாதுஷாவைச் சென்று பார்க்காவிடில் நான் தற்கொலை செய்து கொள்வேன்,'' என்று கூறினாள்.

துளசியும் வேறு வழியின்றிப் பாதுஷாவைப் பார்க்கச் சென்றார். அவருடன் டெல்லி சென்றார்.

துளசி, பாதுஷாவுடன் சென்ற மறுகணமே அவர் தாயார் இதுதான் நல்ல சமயம் என்றுதம் மருமகளை, ''பிறந்த வீடுபோய் சிலநாள் இரு; கொஞ்ச நாள் நீ பிரிந்து இருந்தால் அவன் திருந்தி விடுவான். அப்புறம் டெல்லிக்குப் போகலாம்'' என்றாள்.

மமதாவும், ''சரி அம்மா! எனக்கும் அதுதான் நல்லது என்று தோன்றுகிறது'', என்று சொல்லி தாய் வீடு சென்றாள்.

பாதுஷாவுடன் சென்ற துளசி, அவரிடம் கெஞ்சி, மனைவியைப் பார்க்க வேண்டும் என்று சொல்லி, ஒரு நாள் இரவு ஊருக்குப்புறப்பட்டு வந்து விட்டார்.

''மமதா எங்கே அம்மா? இந்த நிமிஷமே அவளைப் பார்க்க வேண்டும்'' என்றார்.

அவர்தாயும், ''அவள் பிறந்த வீடு போயிருக்கிறாள், வேண்டுமானால் நீயும் அங்கேயே போய் தொலை'', என்று வெறுப்பு மேலிடக்கூறினாள்.

துளசிதாசருக்கு திருவருள் கிடைக்கும் காலம் நெருங்கியது. உலக இச்சைகளில் அவருக்கு வெறுப்பை உண்டாக்க வேண்டும் என்று இறைவன் விரும்பினான்! அதனால் அவ்விரவிலே இறைவன் சில அற்புதங்களைச் செய்தான்.

வானம் இருண்டு, மேகங்கள் குமுறி, தூறலாய் ஆரம்பித்து, இடியும் மின்னலும், புயலும் தோன்றின. இவற்றிற்கெல்லாம் சிறிதும் சளைக்கவில்லை துளசி. அவரது காதல் மயக்கம் அச்சத்தை வென்றது.

மமதாவின் கிராமமோ, யமுனையின் எதிர்க் கரையில் இருந்தது. ஆற்றிலே பெரும் வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றின் இடையே ஒரு பிரேதம் மிதந்து கொண்டிருந்தது. ஓடிவந்த துளசிதாசர், மனவேகத்தால் பிரேதம் என்றும் அறியாது, ஏதோ ஒரு கட்டை என்று நினைத்துப்பற்றி, அதன் மீது அக்கரையை அடைந்தார்.

நள்ளிரவு; நடுநிசி; மழையோ தாரையாகப் பெய்கிறது. தன் மனைவியின் வீட்டு வாசலை அடைந்தார். கதவு தாளிட்டிருந்தது. ஆகவே சுவர் ஏறிக் குதித்து உள்ளே நுழைவோம் என்று வீட்டைச் சுற்றிலும் நாற்புறமும் பார்த்தார். தாழ்வாரத்தை (முற்றம்) அடுத்திருந்த மரக்கிளையில் ஏதோ ஒரு கயிறு தொங்குவது தெரிந்தது. அதைப்பற்றி ஏறி முற்றத்திலே குதித்தார். 'திருடன், திருடன்' என்று கூச்சலிட்டனர் வீட்டிலுள்ளோர். இந்த மழையில் திருடனா' என்று எட்டிப் பார்த்தாள் மமதாதேவி. விஷயம் விளங்கி விட்டது. அவள் உடல் ஒரு சாணாகக் குன்றியது. கணவனை வணங்கி வரவேற்றாள்.

மழை நின்றது. ''எப்படி ஏறிவந்தீர்கள்'', என்றாள் மமதா தேவி. ''மரத்திலே ஒரு கயிறு இருந்தது என்றார். விளக்குடன் சென்று பார்த்தனர். கயிறு அல்ல, நல்ல பாம்பு அது! இறைவனது விளையாடல் அது.

''அடபாவி மனிதரே! இந்த அழியும் உடலின் மீது உமக்கு இத்தனை மோகமோ! இந்த அன்பில் ஒரு சிறு பங்கை இறைவன் மீது செலுத்தினால் போதுமே, பிறவிப் பயனைப் பெற்றுவிட

லாமே!... அதைவிட்டு இந்த இடிஇடிக்கும் அடை மழையில், பாம்பைக் கயிறு என்று நினைத்து இப்படி ஏறிக் குதித்து வந்திருக்கிறீர்களே! நீங்கள் கொண்ட குறிக்கோள் இறைவனது திருவடியாக அல்லவோ இருக்க வேண்டும்'' என்று துயரமும் விம்முதலும் நிறைந்த குரலில் கூறினாள்.

ஆசை வெறியோடு வந்த துளசிக்கு மனைவியின் இந்த வார்த்தையில் ஒரு பொறி தட்டியது. மறு கணமே அவர் அந்த மழையைப் பொருட்படுத்தாமல் வீட்டை விட்டு வெளியேறினார். ''நீயே என் கண்ணைத் திறந்துவிட்ட சத்குரு'', என்று கூறிவிட்டு வேகமாக வெளியேறினார்.

வீட்டை விட்டு வெளியேறிய துளசி, காசி மாநகரை அடைந்து பித்தனைப்போல் ராமர் கோயிலை சுற்றி சுற்றி வந்தார். நரஹரிதாஸ் என்பவர் கோயிலில் ராமாயண பிரவசனம், (உபன்யாசம், சொற்பொழிவு) செய்துகொண்டிருந்தார். துளசி, சொற்பொழிவு முடிந்ததும், அவர் காலில் விழுந்து வணங்கினார். ''அப்பனே! கவலைப்படாதே; நமக்கெல்லாம் ராமன் இருக்கிறான். ராமநாமம் உன்னைக் காப்பாற்றும். தினமும் ஒரு வயதான வேதியர் (வேதம் அறிந்தவர் வேதியர்) ராமாயணம் கேட்க வருகிறார். நீ அவரைப் பிடித்துக் கொள்; விடாதே! உனக்கு ராமனது அருள் கிட்டும்,'' என்றார்.

ஆத்மாராம் தம்மகன் பக்தனானதைக் கண்டு மகிழ்ந்தார். சில நாளில் உயிர் துறந்தார். கணவர் இறந்த துயரில், தாயாரும் கங்கையில் குதித்து விட்டார். அசரீரியின் வாக்குப்படி, மமதாவுடன், தாய் தந்தைக்கு ஈமக்கடன்களை முடித்து, பன்னிரண்டு வருடங்கள் தவம் மேற்கொண்டார்.

தவத்திலே ஆழ்ந்திருந்த சமயம், ஒரு நாள், துளசிதாசருக்கு எதிரில் ஒரு பூதம் தோன்றியது! அது, அவருடைய திருவடிகளின் தூளியினாலே தனது சாபம் நீங்கியதாகத் தெரிவித்து வணங்கி வழிபட்டது.

அனுமனது அருள் கிடைத்தால் 'ராம'னைக் காணலாம் என்று அனுமனை வழிபடத்தொடங்கினார். அப்பொழுது, முன்வந்த பூதம் எதிர்வந்து, அடுத்துள்ள தெருவிலே ஒரு பெரியவர் ராமாயணம் சொல்கிறார்! அதன் இனிமையிலே மயங்கிய மாருதி தினந்தோறும், கிழ் வேதியர் உருவில் வந்து கேட்கிறார். நீர் அங்கே சென்று அவரைப்பற்றிக் கொள்ளும்,'' என்று சொல்லி மறைந்து போயிற்று.

நெடுநாள் காத்திருந்து, ஒரு நாள் மாருதியாகிய கிழவேதியரைப் பிடித்துக்கொண்டார். கிழவர் ஓடுவதும், துளசி துரத்துவதுமாக இருக்க கடைசியில் கிழவர் கண்ணில் படாமல் மறைவதுமாகப் பல முறை நடந்தது. அதன் முடிவாக ஒரு நாள் துளசி, அவர் கைகளைத் தன் மேல் துண்டினால் கட்டிவிட்டார். அவருடன் ஓட முடியாமல் கீழே விழுந்து விட்டார். உடம்பெல்லாம் ரத்தக் காயம். ஆனால் அவர் பிடியை விடவில்லை. பல சோதனைகளுக்குப்பிறகு மாருதியும், ''அன்பனே! உனக்கு என்ன வேண்டும்'' என்றார்.

''ஸ்ரீராமனை தரிசிக்க வேண்டும்,'' என்றார் துளசிதாசர். கிழவர் மறுகணமே அனுமனது உருவமாகக் காட்சியளித்து, ''துளசிதாசனே! ஸ்ரீராமபிரானின் அருளும் தரிசனமும் உனக்கு நிச்சயமாகக் கிடைக்கும். அவருடைய திவ்விய சரித்திரத்தை அப்படியே உன் கனிந்த பக்தி தோய்ந்த உள்ளத்துடன் கவிதையாகப் பாடுவாயாக'', என்றார்.

நல்லொழுக்கம் இல்லாத பாவியாகிய நான் ஸ்ரீராமனைப் பற்றிப்பாடுவதா? என்னால் அது முடியுமா? சுவாமி என்னை சோதிக்காமல் அருள் புரிய வேண்டும்,'' என்றார் துளசிதாசர்.

மாருதியும், ''கவலைப்படாதே! உன் திருந்திய வாழ்க்கை உலகத்துக்கு ஒரு நல்ல பாடமாக இருக்கட்டும். உள்ளத்தில் உண்மையான பக்தியும், உறுதியும் இருக்குமானால், அவன் அருள் உனக்குக் கட்டாயம் கிட்டும் என்பதற்கு நீயே உதாரணம்.'' என்றும், ''உன் வாயால் 'ராமசரிதமானஸம்' பாடினால் அது நிகரற்று விளங்கி, கோடானுகோடி மக்களை உய்விக்கும்! பாடு, ராமதரிசனம் பார் அதோ!'' என்று கூறினார்.

சீதாலக்ஷ்மண பரத சத்ருக்னர் புடை சூழக்கால் நிலந்தோய நடந்து வந்து நின்றான் ராமபிரான். ''கண்டோம்! கண்டோம்! ஜெயசீதாராம்'' என்று ஒலிகள் வானவீதி முழுவதும் பரவின. ராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டனர். மமதாபாயோதிறந்தவாய் மூடாமல், மெய்மறந்து ஒரு புறம் நின்றாள். ராமரும் சீதையும் பார்த்து சிரித்துக் கொண்ட காட்சி அவளை மெய்சிலிர்க்கச் செய்ய 'ஆனந்தம்! ஆனந்தம்! பிரம்மானந்தம்!' என்ற சொற்கள் மட்டுமே அவள் வாயினின்றும் எழுந்தன.

துளசியும், ராமனிடம் தன்னை ஆட்கொள்ளும் படி வேண்ட, ராமரும் ''ஏ! துளசி! ஆட்கொள்ள வேண்டுகிறாய். நீ செய்ய வேண்டிய கடமைகள் நிறைய இருக்கின்றன! அமுதனையதமிழிலும், தேவபாஷையான வடமொழியிலும் என் சரிதை உள்ளது. சிறந்த இலக்கியங்கள் தோன்ற வேண்டும். அவை பக்தியைப் பரப்புவனவாய்த் தெய்வமணம் கமழ்வனவாய்

அமைந்து, மக்களது நெஞ்சிலே தூய்மையையும் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் பரப்பி வாழ்வை வளமுள்ளதாகச் செய்ய வேண்டும்''. 'நல்லொழுக்க மில்லாத பாபியாகிய நான் பாடினால் ஏற்குமோ? உலகம் பார்க்குமோ' என்று வருந்தாதே! எவ்வளவு தாழ்ந்து போனாலும் உள்ளத்தில் உண்மையும், உறுதி யும் தெய்வநெறியும் உண்டானால் மீளலாம். மீண்டும் நல்வாழ்வு பெறலாம். தானும் வாழ்ந்து பிறரையும் வாழ்விக்கலாம் என்ற உண்மையை உன் திருந்திய வாழ்க்கை மக்களுக்கு உணர்த்தும். அனுமன் சொல்லின் செல்வன்; நவவியாகரண பண்டிதன்; அவனிடம் ஞானோபதேசம் பெற்று, பக்தியைப் பரப்பி, பணி செய்து, பிறகு முக்தி பெறுவாய். ஹிந்திமொழியிலே உனது, 'ராம சரிதமானஸம்' தன்னிகரற்று விளங்கும்'', என்று கூறி மறைந்தார்.

ஸ்ரீ ராமரின் ஆணைப்படி இரவு பகலுமாய் ஊர் ஊராய் ராமநாமத்தை எளிய இந்தி மொழியில் பரப்பினார்.

'வட மொழியில் தான் ராமாயணத்தைச் சொல்ல வேண்டும்; இந்தியில் சொல்லி அதன் தரத்தைக் குறைக்காதே', என்று பல பண்டிதர்கள் துளசிதாசரை வன்மையாகக் கண்டித்தனர்.

''எல்லோருக்கும் புரியும் எளிய மொழியில் எடுத்துச் சொன்னால்தான், ராமனின் புகழ் அதிகமாய் பரவி நாடு நலம் பெறும்'' என்று அஞ்சாமல் அவர் களை எதிர்த்து இந்தியில் இராமாயணத்தை எழுதவும் ஆரம்பித்தார்.

துளசிதாசர் வேடுவர் குலம் முதல், அரச குடும்பம் வரையில் அபிமானத்தைப் பெற்றார்.

அக்பரும் கேள்விப்பட்டு, இவரைக் கண்டு இவரது கவிதைகளைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தார். தமது அரசியலுக்கும், 'ராமசரிதமானஸம்' உரை நூலாக விளங்குவது கண்டு பெருமிதம் கொண்டார். பாரத நாடு முழுவதும் ராமசரிதமானஸத்தைப் பரவச் செய்யவும் நினைத்தார்.

இறைவன் ஒருவனே. அவனே வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு தன்மையனாக அவதரித்து மக்களுக்குப் போதனைகளைச் செய்வித்து வாழ்விக் கிறான். ஒவ்வொரு மதமும் அவனை அடையும் வழி களே. அந்தந்த காலத்தில் தேவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப மானிட வடிவந்தாங்கி வந்து, மக்கள் எப்படி வாழவேண்டும், எப்படி நடந்துகொள்ள வேண்டும்



என்பனவற்றையெல்லாம் தானே நடந்து காட்டி மக்களைப்பின்பற்றச் செய்கிறான் என்பதே இறைவ னின் அவதார ரகசியம். வாழ வழிகாட்டியாக விளங்கு வதே தெய்வத்தைப்பற்றிய மகாகதைகளின் உள்ளுறை. ராமாயணம் வெறும் சரிதம்மட்டும் அன்று. சிறந்த அரசியல் நூல் - அரசியலின் தன்மை, மக்களை அரசன் எவ்வாறு பாதுகாக்கவேண்டும் என்பவை ராமாயணத் தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன'' என்று துளசி தாசர் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

இந்தி மொழியில் எழுதப்பட்ட இராமாயண ஏடுகள், காசி விஸ்வநாதர் சந்நிதியில் தங்க ஏடுகளாக மாற்றப்பட்ட அதிசயம் நிகழ்ந்தவுடன் துளசிதாசர் உலகம் ஏற்கும் மகாகவி ஆனார்.

ராமனின் கதை உலகமெல்லாம் பரவியது. இராம சரிதம் என்றவுடன் துளசிதாசர் என்ற நினைவு வரும் அளவிற்கு அவர் புகழ் ஓங்கியது.

பஜனை பத்ததிகளிலும், ஹரிகதாகாலக்ஷேபங் களிலும் (சொற்பொழிவு) துளசிதாசரது கனிரஸம் போன்ற கவிதைகளைக் கேட்கலாம்.

''ராமநாமமே கற்கண்டு, ரஸமறியாதவன்
மனம் கற்குண்டு'' என்று பாடுவதும் கேட்கிறது.

உண்மைதானே! சந்தேகமென்ன?

அனுமன் துளசிதாசருக்குத் தனியே உபதேசம் செய்தது ஞானராமாயணம் எனப் பெயர் பெற்றது.

★★★

# அன்னை அபிராமியின் கருணை

- சேது. சிவா

சோழ நாட்டின் திருக்கடவூரில் அமிர்தலிங்க ஐயருக்கு மகனாகப் பிறந்த சுப்பிரமணியம், அவ் வூரில் கோயில் கொண்டிருக்கும் அன்னை அபிராமி யின் மீது அளவற்ற அன்பு கொண்டு, நின்றாலும், உட்கார்ந்தாலும், படுத்தாலும், நடந்தாலும் அந்த அன்னையின் திருவுருவத்தினையே சிந்தனையாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். அவர் தான் பாடிய அந்தாதி யில் பாடுகின்றார்.

நின்றும் இருந்தும் கிடந்தும்
நடந்தும் நினைப்பது உன்னை

மேலும் அவர், ''உன்னிடம் அன்பு கொண் டேன், நின் புகழ்ச்சியன்றி வேறு எதனையும் விரும்பேன்; மண், விண், திசை நான்கு, ககனம் ஆகிய எல்லா இடங்களிலும் உன் அருள் ஒளியை அன்றி வேறு எதனையும் காணவில்லை'' என்றும் பாடு கின்றார்.

''..... உனக்கு அன்பு பூண்டு கொண்டேன்
நின் புகழ்ச்சி அன்றிப்
பேணேன், ஒரு பொழுதும் நின் திருமேனிப்
பிரகாசம் அன்றிக்
காணேன் இரு நிலமும் திசை
நான்கும் ககனமுமே''

மணிவாசகரும் இதே நிலையைப் பாடி உள்ளார்.

நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும்''

சுப்பிரமணியம் எப்பொழுதும் அன்னை அபிராமியின் திருவுருவச் சிந்தனையிலேயே இருந்து; அன்னையின் தந்தச் சிமிழும், தங்கக் கலசமும் போன்ற திருத்தனங்களின் மீது அப்பிய - பூசிய - நறுமணச் சந்தனக் கலவையும், முத்துக்களாலான கொப்பும், வைரத்தா லான குழையும் - தோடு - திருவிழிகளின் கடைக்கண் வெண்மையும் சேர்ந்து வெளிப்படுத்திய ஒளி அவருக்கு முழுநிலவு போன்று தோன்றியது என்று பாடுகின்றார்.

"செப்பும் கனக கலசமும்
போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம
வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும்
விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதி வைத்தேன்
என் துணை விழிக்கே.''

அந்த அருள் ஒளியில் மூழ்கித் திளைத்து இருந்த அவரிடம், சரபோஜி மன்னன் அன்றைய திதி கேட்ட பொழுது, அமாவாசைக்கு மறு நாளாகிய பிரதமை திதி என்பதனையும் ஓராது 'பௌர்ணமி' என்றார்.


மணிவாசகர் கூறுவது போன்று ''ஊன் கெட்டு, உயிர் கெட்டு, உணர்வு கெட்டு, உள்ளமும் போன நிலையில் 'பௌர்ணமி' என்றார்.

பின்பு தன்னுணர்வு வந்த பொழுது, மன்னன் கேட்டதும், தான் கூறியதும் நினைவுக்கு வர; அரி கண்டம் பாடுவேன்; அன்னையின் அருளால் முழுநிலவு தோன்றும்; இல்லையேல் தீக்குழியில் விழுந்து மாள்வேன்'' என்று கூறி, அன்னையின் மீது அந்தாதிப் பாடல்கள் பாடினார்.

எழுபத்து எட்டாவது பாடலாக மேற்காட்டிய ''செப்பும் கனக கலசமும்'' என்கின்ற பாடலைப் பாடி முடித்தவுடன்; அன்னை அபிராமி தான் அணிந்திருந்த வைரத் தோட்டினை வானவெளியில் வீசி எறிந்து முழுநிலவு போன்று ஒளிரச் செய்தாள்.

எந்த நிலையிலும், எக்காலமும் தன்னையே நினைந்து உருகும் சுப்பிரமணியம், தன் அருள் ஒளியினைக் கண்ணுற்று அதில் மூழ்கித்திளைத்து இருந்த நிலையில் பௌர்ணமி என்று கூறிவிட்டான்; அவன் தன்னுடைய சுய அறிவில் கூறவில்லை. அத னால் அவனைக் காப்பாற்றுவது அன்னையின் கடமை ஆகின்றது.

அந்தாதியில் அவர் கூறுகின்றார்; ''அன்றே என்னைத் தடுத்து ஆட் கொண்டாய்; ஆட்கொண்டது அல்ல என்பது உனக்கு நல்லதாகுமா? நான் எது



செய்தாலும், நடுக்கடலுள் வீழ்ந்தாலும் கரை ஏற்றுவது உன் திருவுள்ளமே ஆகும்.''

''அன்றே தடுத்தென்னை ஆட்கொண்டாய்
கொண்டது அல்ல என்கை
நன்றோ உனக்கு? இனிநான் என் செயினும்
நடுக்கடலுள்
சென்று விழுகினும் கரை ஏற்றுகை
நின் திருவுள்ளமே''

மணிவாசகரும் சிவபிரானை நோக்கி, ''என்னைக் கைவிட்டு விடாதே; நான் தளர்வு அடைந்துள்ளேன்; என்னைத் தாங்கிக் கொள்'' - காப்பாற்றிக் கொள் என்று கூறுகின்றார்.

''சடையவனே தளர்ந்தேன்
எம்பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே.''

திருநாவுக்கரசரும் திருக்கடம்பூர் இறைவனை நோக்கி,

''தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே''

என்று பாடி; தன் அடியவனை இறைவன் தாங்கிக் கொள்வது அவரது கடமை ஒன்று கூறுகின்றார்.

சுப்பிரமணியம் கூறியது பொய்யாகாமற் செய்வது, அவனைக் காப்பாற்ற வேண்டியது அன்னையின் கடமையாகின்றது. அதனால் தன் தோட்டினை முழு நிலவு போன்று ஒளிரச் செய்தாள். அது அவளின் கடமை ஆகும்.

அப்படியாயின் அன்னையின் கருணை எது?

அன்னை அபிராமி உலகம் பதினான்கினையும் படைத்து, படைத்த படியே காத்து வருகின்றவள் என்று அந்தாதியில் பாடுகின்றார்.

''பூத்தவளே புவனம் பதினான்கினையும்
பூத்த வண்ணம் காத்தவளே.''

அவரின் கூற்றுப்படி பதினான்கு உலகங்களும், சந்திர, சூரியர்களும் அங்கங்கு உள்ள உயிர்களும் அவளால் படைக்கப்பட்டுக் காக்கப்படுகின்றன. தாம் படைத்த சந்திரனைத் திருக்கடவூரில் பௌர்ணமியாக ஒளி வீசும்படி ஆணையிட அவளால் முடியும். ஆனால் அவள் அதனைச் செய்யவில்லை.

தன்னால் ஏற்படுத்தப்பட்ட நியதி, ஒழுங்கு, வரன் முறைக்கு விரோதமாகவும்; மாறுபடவும் தேய்பிறை பிரதமையில் பௌர்ணமியாகச் சந்திரனைத் தோன்றச் செய்தால், இயற்கை நியதி மாறி, ஒரு பிரளயம் ஏற்பட்டு விடும்; அதனால் பதினான்கு உலக உயிர்கள் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆட்பட்டு விடும்.

தன்னால் படைக்கப்பட்ட பதினான்கு உலகத்து உயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற திருக்கருத்தில், தன் தோட்டினைப் பௌர்ணமியாக ஒளிரச் செய்தாள். அதுதான் அன்னை அபிராமியின் கருணை.

# பல்லியின் சாப விமோசனம்

- இந்திரா ஆராவமுதன், திருவரங்கம்

இக்ஷ்வாகு வம்சத்தில் ஹேமாங்கன் என்று ஒரு அரசன் இருந்தான். வேதங்களையெல்லாம் அத்யயனம் செய்தவன். ஆகாசத்திலுள்ள நக்ஷத்திரங்களையும், கடற்கரையின் மணல்களின் எண்ணிக்கையைக் கூட எண்ணி விடலாம். அவன் செய்த கோதான பசுக்களை எண்ணவே முடியாதாம் என்று சொல்லும் அளவுக்கு அவன் நிறைய தானங்களைச் செய்திருக்கிறான்.

அவனுடைய ஆசார்யனான வசிஷ்டர், ''இவ்வளவு தானங்கள் செய்கிறாயே. தீர்த்த தானத்தையும் செய்'' என்று கூறினார். அதற்கு அவன், விலையில்லாமல் எங்கேயும் எப்போதும் கிடைக்கிற தீர்த்தத்தை தானம் செய்வதால் என்ன பயன் கிடைக்கப் போகிறது? விலைகொடுத்து வாங்க முடியாத ஏழைகளுக்கும், கல்வியறிவு இல்லாமல் திரியும் அசடர்களுக்கும் தரித்திரர்களுக்கும் மட்டும் யாருமே தரமாட்டார்கள்'' என்று கூறி அவர்களுக்கு துணி, பணம், தங்கம், வெள்ளி என்று வாரி வாரி கொடுத்து வந்தான். ஞானிகளையும், வேதவிற்பன்னர்களையும் எல்லாரும் பூஜிக்கிறார்களே என்று அவர்களுக்கு ஒன்றுமே செய்யாமல், தீர்த்த தானத்தைக் குறை கூறியும் நிந்தித்து வந்தபடியும் இருந்தான்.

அவன் இறந்தபின், தீர்த்த தானம் செய்யாததன் விளைவால் சாதக பக்ஷியாக மூன்று பிறவிகள் பிறந்தான் - மழை நீரைத் தவிர வேறு நீரை இந்த பக்ஷி அருந்தாது என்பது குறிப்பிடத்தக்கது.

பிறகு கழுகாக ஒரு பிறவியும், நாயாக ஏழு பிறவியும் எடுத்தபின் கடைசியாக ஒரு பல்லியாகப் பிறவி எடுத்தான். அவ்வாறு எடுத்தபின், மிதிலா நகரத்தின் அரசன் சுருதகீர்த்தியின் அரண்மனை வாசலில் மேல்பாகத்தில் வசித்து வந்தான். இவ்வாறு 87 ஆண்டுகள் ஓடியது.

சுருததேவர் என்கிற மகரிஷி வேத வேதாந்தங்களை அத்யயனம் செய்தவர். அவர் வருவதைப் பார்த்த அரசன் எழுந்து வரவேற்றான். பின், அவருடைய திருவடிகளை அலம்பி தீர்த்தத்தை தன் மேல் புரோக்ஷித்துக் கொண்டபோது சில திவலைகள் வாசற்படிமேலே உள்ள பல்லியின் மீது விழுந்தது. அந்த வேத சிரேஷ்டருடைய ஸ்ரீபாத தீர்த்த துளிகள் பல்லியின் மீது பட்டவுடன், அதற்கு பூர்வ ஜன்ம ஞானம் பிறந்து விட்டது. உடனே, ''மகரிஷியே! என்னைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்'' என்று கதறியது. ஒலி வந்த திசையில் ஒரு பல்லி கண்ணீர் மல்க இருப்பதை வாசற்படி மேலே மகரிஷி பார்த்தார். ஆச்சர்யம் அடைந்த அவர், ''பல்லியே ஏன் அழுகிறாய்? நீயார்? தேவதையா, அல்லது மனுஷனா? முற்பிறவியில் நீ யாராக இருந்தாய்? உனக்கு ஏன் இந்த கதி ஏற்பட்டது?'' என்று கேட்டார்.

தன்னைப் பற்றிய எல்லா விபரங்களையும் சொன்ன பல்லி, ''தனக்கு ஏன் இத்தனை கஷ்டங்கள் வந்தது என்றும், இதிலிருந்து தயவு பண்ணி விடுவிக்குமாறும்'' வேண்டியது.

பல்லவியின் கதையைக் கேட்ட மகரிஷி ஞான திருஷ்டியினால் நடந்தவைகளை அறிந்து கொண்டார். பின்னர், ''பல்லியே! நீ நன்கு கற்றவனாக இருந்திருக்கிறாய். பற்பல தானங்களை கர்வ மிகுதியால் நீ செய்திருந்தும், தீர்த்த தானத்தை இழிவாக நினைத்தது மட்டுமின்றி, குயுக்தியாகவும் அதை மட்டம் தட்டி பேசியிருக்கிறாய். மேலும், உன் ஆசாரியரான வசிஷ்டர் தீர்த்ததானம் செய்யச் சொல்லியும், அலட்சியப்படுத்தி குரு நிந்தனை வேறு செய்துவிட்டாய். அதனால், கொழுந்து விட்டு எரியும் நெருப்பில் ஆஹுதி போட்டால் நல்ல பலன் கிடைக்கும். அதற்கு பதில் சாம்பலில் போட்டால் என்ன ஆகுமோ அதைப் போல், விழலுக்கு இறைத்த நீர் போல ஆகிவிட்டது. அதனால் தான் இத்தனை பாப யோனி ஜன்மங்கள் எடுக்க வேண்டி வந்தது உனக்கு. இப்போது பாகவத ஸ்ரீபாத தீர்த்தத்தினால் உன் பாவம் நீங்க வேண்டிய காலம் வந்துவிட்டதால் உனக்கு பூர்வ ஜன்ம ஞானமும் வந்து விட்டது. இனி, பயப்படாதே. நான் என்னுடைய புண்ணியங்களில் சிலவற்றை அதாவது தீர்த்த தானம் செய்ததனால் உண்டானவற்றை உனக்கு அளிக்கிறேன். நீ இப்போதே சுவர்க்கத்தை அடைவாய்'' என்று சொல்லி தன்னுடைய கமண்டலத்திலிருந்து தீர்த்தத்தை எடுத்து பல்லியின் பொருட்டு தானம் செய்து கொடுத்தார்.

அரசனும், மற்றவர்களும் வியக்கும்படி, அந்த கணமே பல்லி உருவம் நீங்கி திவ்ய புருஷனாக மாறினான். அதே சமயம் ஆகாயத்திலிருந்து ஒரு விமானம் இறங்கியது. ரிஷியை நமஸ்கரித்து விட்டு, விமானத்தில் அமர்ந்து சுவர்க்கம் போய்ச் சேர்ந்தான் பல்லி அரசன்.

இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம் என்னவென்றால், எந்த தானத்தையும் இழிவாகப் பேசக்கூடாது, ஆசாரியனின் வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து அவர் சொற்படி நடக்க வேண்டும் என்பது தான். ''தவித்த வாய்க்கு தண்ணீர் தரமாட்டான்'' என்று யாரிடமும் பேச்சு கேட்காமல், தீர்த்த தானம் செய்து உய்வோமாக!

★★★

# உறங்கா தெழுமின்!

- அரங்கமணி அம்மையார், திருவரங்கம்

உறங்காதெழுமின்! தோழியர் காள்! – கண்
உறங்கா தெழுமின்! பாவையர்காள்!
புற இருள் நீங்கியே பொழுது புலர்ந்தன
பரிதியின் ஒளிக்கதிர் பொன்மய மாயின
பறவைகள் எழுந்து பறந்தன பாரீர்!
பண்ணிசை கீதம் பாடின கேளீர்
கற வைகள் கன்றுடன் கூடியே பாலைக்
கறப்பதும் காணீர் கடுகியே வாரீர்

காலைத்துயிலுதற் கூடாதென்று – தெய்வக்
கன்னியர் கோதை சொன்னாள் அன்று
பாலை வயதினிற் பரமனைப் பாடி – மிகப்
பனிக்குளிர் வீழ் மார் கழிநீராடி – பூ
மாலையுடன் பா மாலை தொடுத்தாள்
மாலரங் கர்க்கே சூட்டிவிடுத்தாள்
வேலை விழியாள் தன் தோழிய ரோடு
விளக்கிய நோன்பினை நாம் கொண்டாட...

ஏமந்த ருதுவெனும் மார்கழி நன்னாள்
ஏற்றிடும் தேவர்க் குகந்திடும் இன்னாள் – ஒரு
சாம மிருக்கத் துயிலெழ வேண்டும் – அரி
நாமோச் சாரணம் செய்திட வேண்டும்
பாமாலை திருப்பாவை யதனை நிதமும்
பக்தியுடன் பாடித் துதித்திட வேண்டும்
தாமோதரனைப் பாடிய கோதை – தன்
தமிழே நாவிற் இனித்திட வேண்டும்.


கன்ம வினையெனும் போர்வை உதறி
கடுகி எழுந்து கை கால் கழுவி
புன்மை எனும் குளிர் நம்மை விட்டகல
புனித காவிரி நீராடி வருவோம்
சென்மம் பயனுள தாகவே நாமும் – கோதை
செந்தமிழ்ப் பாவினை பாடிமகிழ்வோம்
நன்மை பெறவே நாம் ஒன்று சேர்வோம்
நலமுடை நாரணன் நாமம் சொல்வோம்.

ஆழ்வார் திருமகள் ஆகிய கோதை
அருள்வாக்கினிற் அவதரித்தது பாவை
ஆழ் கடலெனவே அர்த்த மிதற்கு – நாம்
அறிந்தது ரத்தின சுருக்கமிதற்கு
ஏழ் பிறவிக்கும் உறுதுணையாகும்
இகபர சுகமுறும் அமுதமுமாகும்
வாழ்ந்திட வகையும் இதனுட்பொருளே
வண்மையும் வாக்கும் தரும் இவளருளே

அன்னையருள் நமக் கிருப்பத னாலே – அவள்
அருளிய பாக்களை துதிப்பதனாலே
முன்வினை போமினி இன்னற் வராது
கன்னற் பாடற் சுவைக்கிணை ஏது
சென்னெல் விளையும் துன்பம் தொலையும்
சோர்வும் தீரும் சோம்பலுமகலும்
பன்னக மீதினிற் படுத்து உறங்கும்
மன்னவ னரங்கன் மனம் நமக்கிரங்கும்.

கேசவன் கண்ணனைப் பேசிய கோதை – நம்
தேசம் வாழச் செய் திருப்பாவை
மாசறு மனத்துடன் பாடிய பின்னை
மகிழ்வீர் உலகீர் என்றாள் அன்னை

★ ★ ★



பேச (அ)ரும் பாடற் நூற்று நாற்பத்துமூன்றும்
பேசிடவல்லார்க் கிடர் இல்லை என்றும்
தேசு முற்று தீவினையற்று அகத்துடைத்
தூசும் விலகித் தூயவராவார்

தேனினும் இனிய தீஞ்சுவைப் பாவை
தினமும் உண்ணத் திகட் டாதிக் கோவை
வேனிற் காலத் திளநீர் அதுவாம்
மாணிக்க வாசகர் திருவெம்பாவை

சீனியும் பாலும் சேர்ந்திடும் அமுதம்
சீர் பெரும் பைந்தமிழ் ஆராவமுதம்
மானிடற் கென்றே வந்தது புவியில் – இதை
மனதிற் கொள்வீர் மாநிலத்தீரே

கன்னியர்க் கேற்ற நோன்பிது வெனவே – நம்
கருணைத்தவமுனி சொன்னது மிதுவே
மன்னிய சீருடை வாக்கியம் தந்தார்
பொன்னின் காசுடன் ஆசியும் தந்தார்
அன்னவர் பாத கமலம் துணையே அதை
அண்டியவர்க்கும் வருமோ வினையே
நன்னெறி உரைக்கும் நம் குரு தெய்வம்
சொன்னதை செய்திட சோம்பலும் ஆமோ.

பாரதப் பண்புடை நங்கை நல்லீர்: – கவி
பாரதி பேசிடும் புதுமைபெண்காள்!
பேரறிவாற்றலும் பட்டமும் பெற்று
பெரும்பணி ஏற்கும் பெண்ணரசிர்காள்!
ஆறறிவு நமக்(கு) ஆண்டவன் தந்தான்
அதனைக் கொண்டு அவனைத் துதிப்போம்
சீரணி வில்லிபுத்தூர் கோதை
செப்பிய பாடலைப் பாடுவோம் வாரீர்.

பெண்ணினம் வாழ அன்னையின் கருணை
என்னே! இயம்ப மிதனுடைப் பெருமை
தன்னினம் வாழ்ந்திட தாயவள் வந்தாள்
பொன் மொழிப் பாவை நமக்கே ஈந்தாள்
அன்னையின் ஆணையை சிரமேற் கொள்வோம்
அநுதினம் பாடி அவளடி பணிவோம்
என்னை ஆட்கொள்ளும் அன்னையே என்று
இறைஞ்சியவள் அடிமலர் பணிவோமே!

★ ★ ★

# திருவள்ளுவர் வீடு பற்றி ஏன் சொல்லவில்லை?

- **என். சிவராமன்,** பி.காம்., பி.எல்.

மனிதன் கேட்க தெய்வம் சொன்னது கீதை.
கடவுள் கேட்க மனிதன் சொன்னது திருவாசகம்.
மனிதன் கேட்க மனிதன் சொன்னது திருக்குறள்.

அறம், பொருள், இன்பம், வீடு, என்பார்கள். ஆனால் வள்ளுவர் அறம், பொருள், இன்பத்தைச் சொன்னவர் வீடு (மோட்சம்) - பற்றி ஏன் சொல்ல வில்லை?

இக்கேள்வி பல ஆண்டுகளாக கேட்கப்பட்டு வருகின்ற ஒன்றுதான்.

அறம், பொருள் - புறப்பொருளையும், இன்பம் - அகப் பொருளையும் குறிப்பது. இலக்கியங்களை அகம், புறம் என இரு வகைப்படுத்துவது பழந்தமிழர் மரபு. அம்மரபு பற்றியே சங்க இலக்கியங்களுள் ஒன்றான திருக்குறள் வீடு பற்றி வள்ளுவர் சொல்ல வில்லை என்பார்கள் சிலர்.

'வீடு' என்பது என்ன? அது ஓர் உலகன்று; அது எல்லையற்றது; வாக்கு, மனம் கடந்தது.

வள்ளுவர் கூறியுள்ள அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையும் ஒருவன் ஒழுங்காக பின்பற்றி னாலே போதும்; வீடு தானாகவே கிட்டும் என்பது வள்ளுவர் வாக்கு என்பர் சிலர்.

தான் உணர்ந்ததை, கேட்டதை, புரிந்ததை சொல்லும் இயல்பினர் வள்ளுவர். எனவே, தான் காணாத ஒன்றைச் சொல்ல விரும்பாத அவர், வீடு பற்றிச் சொல்லவில்லை என்பர் சிலர்.

இவ்வாறு, அவரவர் கூறுகின்றனர், வள்ளுவர் ஏன் வீடு பற்றி ஒன்றும் சொல்லவில்லை எனும் கேள்விக்கு.

ஆனால், வள்ளுவர் மனமாசற்ற நிலையை வீடு என்றார் எனக் கூறின் தவறில்லை.

பாயிரத்தில் வள்ளுவர் 'வாலறிவன்'; வேண்டு தல் வேண்டாமை இலான்'; என்றும் 'அறவாழி அந்தணன்' என்றும் இறைவனைப் போற்றி உள்ளார்.

இம்மொழிகள் 'அறமே இறை' என்று சொல் கின்றன எனலாம்.

வீட்டை பற்றிய நூல்கள் பின்னாளில் தோன்ற ஆரம்பித்தன. அது முதல் மக்கள் அறம், பொருள், இன்பம் தவிர வீடு பற்றியும் நினைக்க ஆரம்பித்தனர்.

கல்லாடர், மாணி பூதனார், மூலனார், கீரந்தையார், நக்கீரர், கோவூர் கிழார், உக்ர பெருவழுதி யார் ஆகியோர் திருவள்ளுவ மாலையில் கூறும் கருத்துக்களை நோக்குவோம்:

'ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றெனப ஆறு சமயத்தார் - ஒன்றென
எப்பா லவரு மியையவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி'' - கல்லாடர்

திருவள்ளுவர் காலம் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

அக்காலத்திலேயே பல சமயக் கொள்கைகள் 6 சமயங்களாக பிரிக்கப்பட்டிருந்தன. ஆறு சமயங்கள்: வியாச மதம், ஜைமினி மதம், பதஞ்சலி மதம், கபில மதம், கணாத மதம், அக்ஷபாத மதம், மற்றும் சைவம், வைணவம் முதலியன ஆகும்.

'எச்சமயத்தாரும் என்றுச் சொல்லாமல், கல் லாடர் 'எப்பாலவரும்' என்று குறிப்பிட்டமையால், திருக்குறள் எம்மதத்தினருக்கும் பொது நூலாகிறது.

ஆறு மதங்களும் தாமே உயர்ந்தவை என வாதிடுவன. குறள் அப்படி அல்ல;

இதே குறளை மாணிபூதனார் பாராட்டுவதை பாருங்கள்....

'அறனறிந்தே ஆன்ற பொருளறிந்தே மின்பின்
திறனறிந்தோம் வீடு தெளிந்தேம் - மறனெறிந்த
வானார் நெடுமாற வள்ளுவர் தம் வாயாற்
கேளாதன வெல்லாங் கேட்டு''

இதோ மாமூலனார் வருகிறார்:

''அறம் பொருள் இன்பம் வீடு என்னும்அந் நான்கின்
திறந்தெரிந்து செப்பில் தேவை - மறந்தேயும்



மயிலை அருள்மிகு திருவள்ளுவர் திருக்கோயிலில் 15.1.2002 அன்று திருவள்ளுவர் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சென்னை மாநகராட்சி துணைமேயர் திரு கராத்தே ஆர். தியாகராஜன் அவர்களும், மயிலை சட்டமன்ற உறுப்பினர் திரு கே.என். இலட்சுமணன் அவர்களும் சென்னை மாநகராட்சி 10–வது மண்டலத் தலைவர் திரு ஆர். இராஜேந்திரபாபு, சென்னை மாநகராட்சி உறுப்பினர் திருமதி லட்சுமி உதயகுமார், டாக்டர் அரங்க இராமலிங்கம், டாக்டர் த. அமிர்தலிங்கம், சென்னை அறநிலையத்துறை உதவி ஆணையாளர் திருமதி மா. கவிதா, பி.எல். ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். திருக்கோயில் தக்கார் திரு இரா. ஞானசம்பந்தம் மற்றும் திருக்கோயில் நிர்வாக அதிகாரி திரு த. மோகனசுந்தரம் ஆகியோர் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.

வள்ளவனென்பானோர் பேதையவன் வாய்ச் சொற்
கொள்ளார் அறிவுடை யார்''.

'தேவை' என்பதே 'தெய்வமாக' விரிந்தது.

ஆகவே 'வீடு' என்பதை அறம், பொருள், இன்பங்களுக்குள்ளேயே வைத்துள்ளார் வள்ளுவர் எனக் கொள்ளல் வேண்டும்.

'தப்பா முதல் பாவாற் றாமாண்ட பாடலினான்
முப்பாலில் நாற்பான் மொழிந்தவர் - எப்பாலும்
வை வைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள்ளுவர்.'' - கீரந்தையார்

**கோவூர்க்கிழார் பாட்டு:**

'அற முதனான்கும் அகலிடத்தோர் எல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளியக் குறள் வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பான் முறைநேர் ஒவ்வாதே
முன்னை முதுவோர் மொழி.''

**இதோ நக்கீரர் பாடல்:**

''தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆனா அறமுதலா அந்நான்கும் - ஏனோருக்கு
ஊழினுரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழியுலகு என்னாற்றும் மற்று.''

வள்ளுவர் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் சொன்னார் என்பதே இப்பாடல்களின் பொருள்.

இதோ உக்கிர பெருவழுதியார் பாடலுடன் இக்கட்டுரையை முடிப்போம்:

'நான் மறையின் மெய்ப் பொருளை
முப்பொருளா நான் முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த
நூன் முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சம்
சிந்திக்க கேட்க செவி'


'வீடு' என்பது அறம், பொருள், இன்பத்திற்குள் அடக்கம் என்பது புலனாகின்றது அன்றோ!

'வள்ளுவனைப் போல், இளங்கோவைப் போல்,
கம்பனைப் போல் பூமிதனில் யாரும் பிறந்ததில்லை;
உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.... - பாரதியார்.

★★★




பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுடன் இணைந்த ஒட்டன்சத்திரம் அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயில் எதிர்ப்புறமாக ராம்கோ சிமிண்ட்ஸ் நிறுவனத்தலைவர் திருமிகு பி.ஆர். இராமசுப்பிரமணியராஜா அவர்களால் 25 லட்ச ரூபாய் செலவில் உபயமாகக் கட்டித் தரப்பட்டுள்ள பழநி பாத யாத்திரை பக்தர்கள் தங்கும் மண்டபம் திறப்புவிழா 30.12.2001 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு இந்து [illegible] அறநிலைய ஆட்சித் துறை அமைச்சர் திருமிகு பி.சி. ராமசாமி அவர்கள் இம்மண்டபத்தைத் திறந்து வைத்துச் சிறப்பித்தார்கள். பழநித் திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலர் திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல். அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.




தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் ''அறிவியல் தமிழ் – தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கம்'' 5.1.2002 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் திருமிகு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இக்கருத்தரங்கினைத் தொடக்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார்கள். முதல் அமர்வாக நிகழ்ந்த ''சமயத் தமிழ்'' கருத்தரங்கிற்கு மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு பி.இ. ராமசாமி அவர்கள் தலைமை தாங்கினார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் மு. தம்பிதுரை அவர்களும், தமிழகத் திருமடங்களின் தலைவர் களும், தமிழறிஞர் பெருமக்கள் பலரும் பங்கேற்றுச் சிறப்பித்த இக்கருத்தரங்கில் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைச் செயலாளர் திருமிகு பி.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.